குமரகுருபரன்



16]　　1965-ஆம் குருபூசை மலர் (14-5-65)　　[இதழ் 5

னிப் பிரதி 13 நயா பைசா　　வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள். தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஒய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.,
அசிஸ்டண்டு கமிஷனர்.
H. R. & C. E. (Adm) Dept. Ramanad at Madura-2
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T M. குமாரகுருபரன பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்

உள்ளுறை

பக்கம்


சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சி

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்
277 ஆம் ஆண்டு மகேசுவர பூசைத் திருநாள்

விசுவாவசு ௵ வைகாசி ௴ 5 உ செவ்வாய்க்கிழமை



18–5–1965

ஸ்ரீ காசி மடம் :: திருப்பனந்தாள்

சிவ சிவ

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் மகேசுவர பூசைத் திருநாளன்று

தெற்கே இராமேசுவரம் கன்னியாகுமரி முதல் வடக்கே இமயமலையில் 12,000 அடி உயரத்திலுள்ள திருக்கேதாரம் வரையிலுள்ள தலங்களில் நடைபெறும் அந்தணர், அருந்தவர், ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பு

தருமங்களின் விவரம்

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றவை

தொடர் எண்	மூலதனம் ரூபாய்	அன்னம்பாலிப்பு நடைபெறும் தலங்கள்	அன்னம்பாலிப்பு செலவுத் தொகை ரூ	கண்காணிப்பவர்கள் விலாசம்
1	10,000	இராமேசுவரம்	350	ஸ்ரீ காசிமடம், சன்னிதித்தெரு, இராமேசுவரம்,
2	7,000	கன்னியாகுமரி	200	ஸ்ரீ காசிமடம், ஆச்சிராமம்.
3	5,000	திருச்செந்தூர்	140	திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., ஸ்ரீவைகுண்டம்.
4	9,000	ஸ்ரீவைகுண்டம்	275	டிடு டிடு டிடு
5	5,000	திருநெல்வேலி	140	திரு. சி. ச. அருணாசலம்பிள்ளை, உரிமையாளர், கணபதி ஆலை, தாழையூத்து.
6	5,000	பழையபாபநாசம்	140	திரு. D. மரகதசுப்பிரமணியப் பிள்ளை, அம்பாசமுத்திரம்.
7	5,000	திருக்குற்றாலம்	190	திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., ஸ்ரீவைகுண்டம்.
8	5,000	உத்தரகோசமங்கை	140	திரு. M. V. ராகவேந்திரராவ் B. A. திவான், இராமநாதபுரம் சமஸ்தானம், இராமநாதபுரம்.
9	5,000	திருப்பெருந்துறை	140	திரு. S. முருகேசம் பிள்ளை, திருலோக்கி.
10	2,50,000	மதுரை	500	சிவஸ்ரீ சிவதர்மபாஸ்கர, ம. க. சுந்தரேசபட்டர், மதுரை.
		கன்னியாகுமரி ஆச்சிராமம் வகையரு தருமங்கள்		

11	10,000	பழநி	285	ஸ்ரீ சிவகுமாரசுவாமிகள், ஸ்ரீ சாதுசுவாமிகள் மடம், பழநி.
12	5,000	விராலிமலை	140	திரு. வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார், திருச்சிராப்பள்ளி.
13	7,000	திருவானைக்கா	200	ஷை ஷை ஷை
14	6,000	திருவையாறு	190	திரு. அண்ணுசாமி பாகவதர், திருவையாறு.
15	7,000	சுவாமிமலை	200	திரு. N. R. ராமாநுஜம் B. A., கும்பகோணம்.
16	5,000	திருவிடைமருதூர்	140	Dr. A. சுந்தரம் L. I. M., திருவிடைமருதூர்.
17	1,00,000	திருப்பனந்தாள்	4,000	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
18	5,000	வேதாரண்யம்	140	திரு. S. P. வெங்கடராமையர், பெரி. அழ. மு. அன்னசத்திரம், வேதாரணியம்.
19	5,000	திருப்புகலூர்	200	திரு. N. M. சோமசுந்தரம் பிள்ளை, திருப்புகலூர்.
20	7.000	திருவாரூர்	200	திரு. டி. சோமாஸ்கந்த தேசிகர், திருவாரூர்.
21	5,000	திருநாகைக்காரோணம்	150	திரு. S. சுப்பையா முதலியார், அத்திப்புலியூர்.
22	5,000	திருநள்ளாறு	140	திரு. குட்டியப்பபிள்ளை, ஷராப், ஸ்ரீ தர்பாரண்யேசுவரர் தேவஸ்தானம், திருநள்ளாறு.
23	5.000	காவிரிப்பூம்பட்டினம்	140	திரு. S. சம்பந்தம்பிள்ளை, கீழப்பெரும்பள்ளம்.
24	5,000	ஆக்கூர்	145	திரு. T. R. அகோரம் ஐயர், ஆக்கூர்.
25	10,000	மாயூரம்	285	திரு. G. S. பிள்ளை (கேதாரம்பிள்ளை), பல்லவராயன்பேட்டை.
26	7,000	வைத்தீசுவரன்கோயில்	200	திரு. R. S. ராமையாபிள்ளை, பூங்குடி முதலியார் சத்திரம், வைத்தீசுவரன்கோயில்.
27	5,000	சீர்காழி	145	திரு. வி. சுவேதாரண்யம் ஐயர் B. A., B. L., அட்வகேட், சீர்காழி.
28	5,000	ஆச்சாள்புரம்	200	திரு. S. நாகலிங்கம் செட்டியார், ஆச்சாள்புரம்.
29	20,000	சிதம்பரம்	150	ஸ்ரீ காசிமடம், சிதம்பரம்.

30	5,000	திருக்கோவலூர்	140	திரு. K. M. வேலாயுதம் பிள்ளை, கீழையூர். திருக்கோவலூர்.
31	7,000	திருவண்ணாமலை	265	திரு. தி. ஷண்முகசுந்தர ஓதுவார். திருவண்ணாமலை.
32	7,000	காஞ்சிபுரம்	200	திரு. க. சுப்பிரமணிய ஐயர் B. A., தியாகராஜ விலாசம், சென்னை.
33	7,000	திருக்கழுக்குன்றம்	200	டி டி டி
34	5,000	சென்னை	150	சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை.
35	5,000	திருவொற்றியூர்	140	திரு. க. சுப்பிரமணிய ஐயர் B. A., தியாகராஜ விலாசம், சென்னை.
36	5,000	வடதிருவாலங்காடு	140	திரு. மு. சபாபதி தேசிகர், வடதிருவாலங்காடு.
37	7,000	திருத்தணிகை	200	திரு. க. சுப்பிரமணிய ஐயர் B. A., தியாகராஜ விலாசம், சென்னை.
38	7,000	காளஹஸ்தி	200	டி டி டி
39	5,600	பிரயாகை	200	ஜோஷிமடத்துச் சங்கராச்சாரிய சுவாமிகள் மடம்.
40	10,000	வாரணாசி	400	ஸ்ரீ குமாரசுவாமி மடம், கேதாரகட்டம், வாரணாசி.
...	...	டி	500	[சாதுக்களுக்குப் பண்டாரா] டி டி
41	5,000	டில்லி	140	திரு. K. பாலகிருஷ்ண ஐயர், ஸ்ரீ சுவாமிநாதசுவாமி சேவாசமாஜம், புதுடில்லி.
42	8,500	ஹரத்துவார்	265	போலாநாத் ஆச்சிரமம், ஹரத்துவார்.
43	7,000	ரிஷிகேசம்	200	சிவாநந்த ஆச்சிரமம், ரிஷிகேசம்.
44	7,000	திருக்கேதாரம்	275	ஸ்ரீ கணேஷ்சங்கர் வாஜ்பாய், கேதார்நாத்பண்டா, கேதார்நாத். இமயமலை.
கூடுதல்	6,27,600		13,080	

உத்தரவுப்படி

வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்

ஜூனியர், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

Endowments created by His Holiness

Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal

Head of Sri Kasi Mutt, Tirupanandal

for feeding of Brahmins, Ascetics & the poor etc.,
on Sri Kumaragurupara Swamigal Maheswarapuja (Memorial) Day
from Rameswaram & Kanyakumari in the south of India to Kedarnath situated
at a height of 12,000 feet on the Himalayas in the north.

Serial Number	Capital Rupees	Places where feeding is conducted	Amount Spent. Rs.	Names of persons who supervise the feeding
1	10,000	Rameswaram	350	Sri Kasi Mutt, Sannithi Street, Rameswaram.
2	7.000	Kanyakumari	200	Sri Kasi Mutt. Achiramam.
3	5,000	Tiruchendur	140	Sri T. M. Kumaraguruparan Pillai B. A., B. L., Srivaikuntam.
4	9.000	Srivaikuntam	275	do do do
5	5,000	Tirunelveli	140	Sri C. S. Arunachalam Pillai. Ganapathi Mills. Thazhaiyuthu.
6	5.000	Old Papanasam	140	Sri D. Maragathasubramanya Pillai, Ambasamudram.
7	5,000	Tirukkutralam	190	Sri T. M. Kumaraguruparan Pillai, B. A., B. L., Srivaikuntam.
8	5,000	Uttarakosamangai	140	Sri M. V. Ragavendra Rao B. A., Dewan & Administrative Secretary, Ramnad Devasthanam, Ramanathapuram.
9	5,000	Tirupperunthurai	140	Sri S. Murugesam Pillai. Tiruloki.
10	2,50,000	Madurai (Kanyakumari etc. Charities)	500	Siva Dharmabhaskara Sivasri M.K. Sundaresa Bhattar, Madurai

Serial Number	Capital Rupees	Places where feeding is conducted	Amount Spent. Rs.	Names of persons who supervise the feeding
11	10,000	Palani	285	Sri Sivakumara Swamigal, Sri Sadhu Swamigal Mutt, Palani.
12	5,000	Viralimalai	140	Sri T. Pattusami Oduwar, Tiruchirapalli.
13	7,000	Tiruvanaikka	200	do do do
14	6,000	Tiruvaiyaru	190	Sri Annasami Bhagavathar, Tiruvaiyaru.
15	7,000	Swamimalai	200	Sri N. R. Ramanujam B. A., Kumbakonam.
16	5,000	Tiruvidaimarudur	140	Dr. A. Sundaram L. I. M., Tiruvidaimarudur.
17	1,00,000	Tirupanandal	4,000	Sri Kasi Mutt, Tirupanandal.
18	5,000	Vedaranyam	140	Sri S. P. Venkatarama Iyer. Peri. Azha. Mu. Annasathiram, Vedaranyam.
19	5,000	Tiruppugalur	200	Sri N. M. Somasundaram Pillai, Tiruppugalur.
20	7,000	Tiruvarur	200	Sri T. Somaskantha Desigar, Tiruvarur.
21	5,000	ThiruNagaikaronam	150	Sri S. Subbiah Mudaliar. Athipuliyur.
22	5,000	Tirunallar	140	Sri KuttiappaPillai, Shroff, Sri Darbaranyeswarar Devasthanam Tirunallar.
23	5,000	Kaveripoompattinam	140	Sri S. Sambandam Pillai, Keezhaperumballam.
24	5,000	Akkur	145	Sri T. R. Agoram Iyer, Akkur.
25	10,000	Mayuram	285	Sri G. S. Pillai (Kedaram Pillai). Pallavarayanpettai.
26	7,000	Vaitheeswarankoil	200	Sri R. S. RamayyaPillai, Poongudi Mudaliar Choultry, Vaitheeswarankoil.
27	5,000	Sirkali	145	Sri V. Swetharanyam Iyer B. A., B. L., Advocate, Sirkali.

28	5,000	Achalpuram	200	Sri S. Nagalingam Chettiar, Achalpuram.
29	20,000	Chidambaram	150	Sri Kasi Mutt. Chidambaram.
30	5,000	Tirukkovalur	140	Sri K. M. Velayutham Pillai, Kilaiyur, Tirukkovalur.
31	7,000	Tiru Annamalai	265	Sri T. Shanmugasundara Othuvar, Thiruvannamalai.
32	7.000	Kanchipuram	200	Sri K. Subramanya Iyer B. A., Thiagaraja vilasam, Madras-5.
33	7,000	Tirukkazhukkunram	200	do do do
34	5,000	Madras	150	Chennapuri Annathana Samajam, Madras-5.
35	5,000	Tiruvotriyur	140	Sri K. Subramanya Iyer B. A., Thiagaraja vilasam, Madras-5.
36	5,000	Vada Tiruvalangadu	140	Sri M. Sabhapathi Desigar, Vada Tiruvalangadu.
37	7,000	Tiruthanigai	200	Sri K. Subramanya Iyer B. A., Thiagaraja vilasam Madras-5.
38	7,000	Kalahasti	200	do do do
39	5,600	Prayag	200	Sankaracharya Swamigal Mutt of Joshi Mutt.
40	10,000	Varanasi	400	Sri Kumaraswami Mutt, Kedar Ghat, Varanasi.
...	...	do	500	[SADHUS PANDARA] do do
41	5,000	Delhi	140	Sri K. Balakrishna Iyer B. A., Secretary, Sri Swaminathaswami Seva Samaj, New Delhi-16.
42	8,500	Haradwar	265	Bholanath Ashram, Haradwar.
43	7,000	Rishi Kesh	200	Sivanantha Ashram, Rishikesh.
44	7,000	Kedarnath	275	Shri Ganesh Shankar Vajapai, Kedarnath Panda, Kedarnath, Himalayas.
Total	6,27,600		13,080	

By order of His Holiness

VIDWAN SRI MUTHU KUMARASWAMI TAMBIRAN

Junior, Sri Kasi Mutt, Tirupanandal.

SIVA SIVA

Saint Kumara Gurupara Swamigal

Saint Kumaraguruparar was born at Srivaikuntam. He got the power of speech in his fifth year by the blessings of Sri Senthilandavan at Tiruchendur and sang Kandarkalivenba. He sang at Madurai in praise of Goddess Meenakshi, a Pillai Tamil and he was garlanded by the Goddess with a pearl necklace. At the request of King Tirumalai Naik, he then composed Neethineri vilakkam a moral code for inculcating wisdom to mankind. At Dharmapuram he was initiated by Sri Masilamani Desikar in the saintly order of the Dharma puram Athinam and there he improvised Pandara Mummanikkovai in praise of that Pontiff. While he visited the holy shrines of Tiruvarur, Vaitheeswarankoil, and Chidambaram, he sang Nanmanimalai, Pillai Tamil, and Mummanikkovai. He then went on pilgrimage to Benares where he improvised Sakalakalavallimalai in praise of the Goddess of Learning, and also sang Kasikkalambagam He rode on a live lion when he interviewed the Padusha at Benares and the Padusha having been deeply and devoutly impressed by the greatness of the Swamigal very liberally helped the Saint in all his activities viz., erection of Kedarghat and Kedareeshwar Mandir on the west bank of the Ganges and founding a charitable institution nearby.

Blessed be the eyes that see the Cosmic Dance in the Golden Hall!
Blessed be the ears that hear the prowess of the Lord!
Blessed be the head that bows down to Him!
Blessed be the mouth that sings in praise of Him!


(Chidambara Cheyyutkovai
—St. Kumara Guruparar)

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்

நிறுவப் பெற்ற நிதிகளின்படி

“ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்பு”

நடைபெறும் இடங்கள்



1 Thirukedaram
2 Rishi Kesh
3 Haradwar
4 Prayag
5 Varanasi
6 Kalahasti
7 Tiruthanigai
8 Vada Tiruvalangadu
9 Kanchipuram
10 Tirukkazhukkunram
11 Madras
12 Tiru Annamalai
13 Chidambaram
14 Achalpuram
15 Kaveripoompattinam
16 Sirkali
17 Vaitheeswaran koil
18 Akkur
19 Mayuram
20 Tirupanandal
21 Swamimalai
22 Tiruvaiyaru
23 Tiruppugalur
24 Tiruvarur
25 Vedaranyam
26 Tiruvanaikka
27 Palani
28 Madurai
29 Tirukkutralam
30 OldPapanasam
31 Tirunelveli
32 Srivaikuntam
33 Tiruchendur
34 Rameswaram
35 Kanyakumari
36 Tirupperunthurai
37 Viralimalai
38 Tiruvidaimarudur
39 Tirunallar
40 Tirukkovalur
41 Tiruvotriyur
42 New Delhi
43 Uttarakosamangai
44 Nagappattinam

உ

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டம் கொண்டான் காபாலீச் சுரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்(கு)
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய் —சம்பந்தர்

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர்நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாம்எனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

—பெரியபுராணம்

படமாடக் கோயிற் பகவற்(கு) ஒன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்(கு) ஒன்றீயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.

தண்டறு சிந்தை தபோதனர் தாம்மகிழ்ந்(து)
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமும் கொண்டதென்(று)
எண்டிசை நந்தி எடுத்துரைத் தானே.

—திருமூலர் திருமந்திரம்

சிவனை யர்ச்சனை செய்பவர்க்(கு) இசைவன செய்தோர்
அவனெ னக்குறித்து அடியரைப் பூசைசெய்துஆறு
சுவைய இன்னமு(து) அருந்திநோர் தொண்டர்தம் பணியே
தவமெனப் புரிந்(து) உயர்ச்சியைச் சார்ந்தவர் இவர்காண்.

—திருவிளையாடற் புராணம்

பிரம சாரியைப் பேரறம் ஓங்கிடும்
கிரக சாரியை யூட்டிய கேண்மையர்
விரவி யேசிவ லோகம் விரும்பிய
பரம போக மனைத்தும் பயில்வரே. —சிவதருமோத்தரம்

திருச்சிற்றம்பலம்

கோவிலூர் ஆண்டவர்
A. No. 10626
M42
நூலகம், கோவிலூர்

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 16 | விசுவாவசு-ஹு வைகாசித் திங்கள் 1-ம்வ [14-5-65] | இதழ் 5

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 13)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

ஆகம வளவை எனினும் உரையளவை எனினும் ஒன்றே. ஆகமப்ரமாணம் சப்தப்ரமாணம் என்றும் வழங்குப. சப்தமாவது ஆப்தவாக்யம். ஆப்தன் உள்ளது கூறுவோன். பிரத்யட்சம் அநுமானம் ஆகிய இரண்டனுலும் அறியப் படாத பொருளை அறிவிக்கும் வேதாகமங்கள் ஆகமப்ரமாண வாக்கியங்கள். அவற்றைக் கூறியவன் ஈசுவரன். முற்றறிவனும் எவ்வுயிர்க்கும் இரங்கியருள்பவனும் ஆவன் அவ்வீசுவரன். ஆதலின்

அவனைச் சர்வஞ்ஞன்; சர்வ ஜீவதயாபரன் என்பர். சிற்றறிவனும் வஞ்சகனும் ஆன ஒருவன் சொல் எதற்கும் பிரமாணம் ஆகாது. அவ்வீசுவரனே ஆப்தன். அவன் வாக்யமே ஆப்த வாக்யம். அதுவே ஆகமப்ரமாணமாம். சித்தியாரில் "அநாதியே அமலன் ஆய அறிவன் நூல் ஆகமம்" என்றதுணர்க. இதில் 'நூல்' என்றது வேத நூலை, 'ஆகமம்' என்றது சிவாகமத்தை. மற்றைய நூல்களையும் ஆகமங்களையும் ஈண்டுக் கொள்ளல் தகாது.

ஆகமம் இருவகைத்து. வேதத்தையொட்டியது ஒன்று. ஒட்டாதது ஒன்று. முன்னது கொள்ளத்தக்கது. "மானுட வாக்கியத்தினும் இருடிகள் வாக்கியம் விசிட்டம். அதனினும் தேவதைகளின் வாக்கியம் விசிட்டம். அதனினும் நான்முகன் வாக்கியம் விசிட்டம். அதனினும் திருமால் வாக்கியம் விசிட்டம். அதனினும் உருத்திரன் வாக்கியம் விசிட்டம். அதனினும் சிவவாக்கியம் விசிட்டம். இவ்வாறு மேன்மேல் விசிட்டமும் கீழ்க் கீழ்த்தள்ளுகின்றவற்றுள் சிவாகமங்களுக்கு மாறுபடாத சாத்திரங்கள் எல்லாமும் பிராமாணியம். மாறுபடுபவை அப் பிராமாணியம்.

பிரமாணம் பிரமிதி பிரமாதா பிரமேயம் என்று நான்குண்டு. ஐயமும் திரிபும் இல்லாத ஆன்ம சிற்சத்தியே பிரமாணம். ஆன்மா பிரமாதா. பதி பசு பாசம் மூன்றும் அறியப் படுகையிற் பிரமேயம். அறிதற்றொழில் ஆன்ம சிற்சத்தியின் தொழில்.

சிவசிற்சத்தியே பிரமாணமாயும் பிரமிதியாயும் கொள்ளற் பாலது. அதைவிரிக்கிற் பெருகும். (1) ஆன்ம சிற்சத்தி வித்தை அராகம் முதலியவற்றொடு கூடிக்கலங்கியதாய்ப் பொருளை நேர்ந்த பொழுது அத்தகையதாய சிற்சத்தி பிரமாணம் புத்திவிருத்தியொடு கூடிப் பொருளையாராய்கின்ற பொழுது பிரமா (பிரமை). இவ்வுபாதிகளாலே அவ்வாறு (2) அவற்றொடு கூடிக் கலங்காத சைதந்யம் பிரமாதா. இவ்வுபாதி விருத்தியில்லாமல் சிற்சத்தி சிவோன்முகியான போது சிவஞான அபிவியக்தியால் (சூரிய கிரணத்தால் சூரியனையும்

மற்றெல்லாப் பொருளையும் காண்டல் போலச்) சிவனையும் சிவ ஞானத்தையும் தன்னையும் தானே காண்டல் கூடும். காணும் பொழுது அது பிரமையாம்; அப்பிரமையை அறிவிக்குஞ் சிவ ஞானம் பிரமாணம் ஆம். சிவத்தொடு ஏகனாகி நிற்கும் அநு சந்தானம் பிரமிதியாம் ஆன்மா பிரமாதா ஆம். இங்கு 1, 2, என்னும் எண் இட்ட வாக்கியத்தை நோக்குக. அவற்றுள் முதலா வது எண்ணாற் குறிக்கப்பட்ட நிலையில் உள்ளது பிரமாணமே ஒழியப் பிரமாதா ஆகாது. இரண்டாவது எண்ணாற் குறிக்கப்பட்ட நிலையில் உள்ளது. பிரமாதா ஒழியப் பிரமாணம் ஆகாது.

இவையெல்லாம் தருக்கஞானம் இல்லாதார்க்குச் சிறிதும் விளங்காதன ஆயினும், அவசியமாக இருத்தலால் இங்குக் குறிக்கப்பட்டன. எவரேனும் இதைப் பார்த்து விரிவாக உணர விரும்பித் தருக்க நூல்களைக் கற்க முயலலாம் அன்றோ? அதுவே இதற்குப்பயன். தருக்கசாத்திரம் வேண்டா என்பாரும் பிர மாணம் மூன்றும் பற்றிய அறிவையாதல் பெற்றிருத்தல் நன்று. பெறாரேல் அவரறிவு பொருளுணர்ச்சிக்குப் பொருந்திய ஆற்ற லுடையதாகாது.

(1) மயங்கியவன் கூற்றும். (2) வஞ்சகன் கூற்றும் ஆகமப்ரமாணம் ஆகா. உள்ளது கூறுவோன் வாக்கியமே பிரமாணமாகும். இது முன்னும் கூறப்பட்டது. 'ஆப்தவாக்யம்' என்றது அவ்விருவர் வாக்கியத்தை நீக்குதற்காகவே.

ஆப்தன் வாக்யம் ஆகமப்ரமாணம் என்பதே உரையளவை யின் பூரண லட்சணம். வாக்யம் உரையளவை என்றால், மயங் கியவன் கூற்றும் வஞ்சகன் கூற்றும் பிரமாணம் என்று ஆகும். ஆதலால் அவற்றை விலக்க 'ஆப்தன்' என்னும் விசேடணம் இன்றியமையாதது.

ஆப்தன் சத்தம் என்று கூறில், அது வாக்கியத்தையே கூறிற்று என்று கொள்ள இடம் இல்லை. கசடதபற என்று இடும் சத்தமும் அன்ன பிறவும் சப்தமேயாதலின் அவையும் கொள்ளப்படும். அதனால், வாக்கியம் ஆதல் என்பது அத்யா வசியமாகும். 'தக்கோர்வாய்க் கேட்டலாகிய ஆகமவளவை' (502) என்னும் பரிமேலழகருரையையும் நோக்குக.

வாக்கியம் சொற்கூட்டம். ஆற்றலுடையது சொல். இச் சொல்லால் இப்பொருளுணர்த்துக என்னும் இறைவனிச்சை யாகிய சங்கேதமே ஆற்றல். ஆற்றலுடையதாதற்பாலது யாது? அவ்வாருதலின் இயைபு (சம்பந்தம்) இலக்கணே. அஃது இருவ கைத்து. ஒன்று குணம் பற்றி நிகழ்வதும் ஒன்று சுத்தமும் ஆம். இவற்றுள் முதலாவதற்கு உதாரணம்:– 'இம்மாணுக்கன் சிங்கம்.' என்பது. சுத்தம் (1) விட்டது (2) விடாதது (3) விட்டும் விடாதது எனமுவகைத்து, அவற்றிற்கு முறையே உதாரணம் (1) கங்கையின்கண் இடைச்சேரி (2) காக்கைகளினின்றும் தயிர் காக்கப்படுக., (3) அது நீ ஆகின்ருய் என்பன.

இவை யெல்லாம் உரையளவை பற்றி அறியுங்கால் முயன்று அடையும் ஞானவிசேடம்.

திருக்குறளில் 'அவையஞ்சாமை' என்னும் தலைப்பின் கீழ் "ஆற்றின் அளவறிந்து கற்க" என்றதற்கு விளக்கம் எழுதிய பரிமேலழகர் ''அளவை நூல் சொன்னூல் (சப்தசாஸ்திரம்) கற்றே கற்க வேண்டுதலின் அதற்கு அஃது ஆறு எனப்பட்டது. அளக்குங் கருவியை அளவு என்ருர்" எனவுரைத்தார். 'ஆறு– சொல்லிலக்கண நெறி. அதனுல், தொல். சொல். சேனுவரையம் முதலியவற்றையும் நன்னூல், சொல் சங்கர நமச்சிவாயத் தையும் கற்றதமிழர் தருக்கம் கற்க உரியர் என்று கூறல் தமிழ் மொழி குறித்து அமையும். வடமொழியில் தருக்கம் படிப்பார்க் குரிய சொன்னூல் வேறுள.

'கருத்தா மொழியாகிய ஆகமம்' (குறள், 242. உரை) 'தக்கோர்வாய்க் கேட்டலாகிய ஆகமவளவை' (502), என்றதும் 'தன்னுயிர்க்கு இன்னுமை தான் அறிவான் என்கொலோ மன் னுயிர்க்கு இன்னுசெயல்' (318) "இவ்வாறே இவை பிற உயிர்க் கும் இன்னுதன என்பது அனுமானத்தான் அறிந்து வைத்துச் செய் கின்ற இப்பாவம் கழுவப்படாமையின், இன்னுதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்தும் என்பது ஆகமத்தானும் அறிந்து ஒழி யற் பாலன்" என்றதும், வேண்டாமையன்ன விழுச்செல்வம் "ஆகமவளவை போலாது காட்சியளவையான் எல்லாரானும் தெளியப்படுதலின் மக்கள் செல்வம் வகுத்து முற்கூறப்பட்டது"

என்றதும், 'தெரிந்துதெளிதல்' (அதிகாரம். 51) "அஃதாவது அமைச்சர் முதலாயினாரைப் பிறப்புக் குணம் அறிவு என்பன வற்றையும் செயலையும் காட்சி கருத்து ஆகமம் என்னும் அளவை களான் ஆராய்ந்து தெளிதல்." என்றதும், இங்கனம் பல குறளுரைகளிற் பரிமேலழகர் ஆகமம் எனப்படும் உரையளவையையும் ஏனைய காட்சி(பிரத்யட்சம்) கருத்து (அநுமானம்) முதலியவற்றையும் புலப்படுத்திய உபகாரத்தை மறவாது போற்றுவது புலவர் கடனாகும். அத்தகைய புலவர்பிரானைப் போற்றாது விடினும் தூற்றாது நிற்றல் கழுவாயில் ஏற்றாது காக்கும் நல்லறமாகும்.

"அண்டம் திருமேனி அம்பலத்தார்க்கு என்பது உரை கொண்டு அங்கு உணர்தல் குறைபாடே-கண்டளவில் விண்ணம் பொலிந்ததொரு மின் கொடியே சொல்லாதோ வண்ணம் பொலிந்திருந்த வா" என்று ஆசிரியர் குமரகுருபர முனிவரர் 'உரையளவை'வேண்டா காட்சியளவையே போதும் என்றருளினர். காட்சியளவையைத் திருக்குறளில் 37, 71, 316, 363, அதிகாரம் 51. கொளு. 503. ஆம் எண்ணுடையவற்றின் உரையிற் பரிமேலழகர் குறித்தமை காண்க.

இவ்வெண்பாவில் 'மின்கொடியே சொல்லாதோ' என்றது காட்சியளவையே அமையும் என்றவாறு. 'உரைகொண்டுணர்தல் குறைபாடு' என்றது ஆகமவளவை வேண்டா என்றவாறு. எதற்கு? அம்பலத்தார்க்கு அண்டம் திருமேனி என்றதற்கு. திருமேனி அண்டமாதலால்தான் அதில் மின்கொடி இருக்கிறது. 'மின்'னல் இருக்குங் காட்சியே அதை மெய்ப்பிக்கின்றது. அதை ஆகமம் பற்றி அறிவது வேண்டா.

(தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member. Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 4-ன் தொடர்ச்சி

Sanmargi sees the Self and the cosmos
சன்மார்க்கி தன்னொடு பிறவும் காண்கின்றான்

67 அன்னிய பாசமும் ஆகுங் கருமமும்
முன்னும் அவத்தையும் மூலப் பகுதியும்
பின்னிய ஞானமும் பேதாதி பேதமும்
தன்னொடும் கண்டவர் சன்மார்க்கத் தோரே.

The bondage that keeps the soul on alien to God,
The Karmas that flow from it,
The avastas that the Self experiences,
The Primordial Stuff that is Matter's nucleus,
The Consciousness that entwines it,
The million million mutations that pervadeth the universe,
They who see them all and their own selves
Verily are they the Sanmargis' true.

தன்னை இறைவனிடமிருந்து பிரித்தற்குக் காரணமாய பாசத்தையும், அதனால் எழும் வினையினையும், அவ்வினை நுகர்ச்சியிலே எழும் அவத்தை பேதங்களையும், தனுகரண புவனங்களுக்குக் காரணமாயிருக்கும் மூலப் பிரகிருதி மாயையும், அதனோடு

பின்னிக்கிடக்கும் திரிபு கொண்ட அறிவையும், அண்ட சராசரத்தில் தோன்றும் அளப்பரிய வேறுபாடுகளையும், இவற்றேடு தம்மையும் எவர் காண்கின்றனரோ, அவரே சன்மார்க்கராவர்.

Sanmarga leadeth to rest in Siva
சன்மார்க்கம் தற்சிவத்துள் சார்விக்கின்றது

68 பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்,
கசியாத நெஞ்சம் கசியக் கசிவித்து,
ஒசியாத உண்மைச் சொருபோ தயத்துற்று,
அசைவான தில்லாமை யானசன் மார்க்கமே.

Rending the Soul's bonds asunder
Conjoining him to the Lord
Melting the heart that knew no melting
Merging into the Form Primordial that is Truth
Sanmarga verily giveth the soul [Eternal
The rest that knoweth no commotion ever

ஆன்மாவின், பாசத்தளையை அவிழ்த்து, பதியோடு இணைத்து, பேரன்பினைப் பெருகச்செய்து, என்றென்றும் உண்மையாம் தற்சிவ ருபத்தில் கலக்கச்செய்து, அசைவற்ற நிலையைத் தருவதே சன்மார்க்கமாகும்.

வரி 2. கன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே
கண்டவுடன் ஆனந்தங் காண்டலாகும்.

என்ருர் தாயுமானுரும். (ஆகாரபுவனம்-சிதம்பர ரகசியம். 12-ம் பாட்டு)

(தொடரும்)

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 16, இதழ் 4-ன் தொடர்ச்சி]

ஒருவடிவுங் கொள்ளா — துனதுருவங் கொண்டுன்
திருவடியே பற்றிநிற்கச் — செய்தருள்வாய் சற்குருவே 221

நின்பால்என் னெஞ்சை — நிற்கச் செய்தாலுலகி
லென்பாலிரா தோடி — லென்செய்வேன் சற்குருவே 222

நினைப்புமறப் பற்றநில — நிற்கச் செய்தானெஞ்
செனைப்புறத்தி லீர்ப்பதிதற் — கென்செய்வேன் சற்குருவே 223

என்றுலடக்கும் வகை — யில்லையினி யென்மனதை
யுன்று லடக்கு — முளவருள்வாய் சற்குருவே 224

மனக்கேத மோர்கணத்தின் — மாற்றியெனைக் காப்ப
துனக்கே தகுமெனவென் — னுள்ளுணர்ந்தேன் சற்குருவே 225

என்னேக்க மெல்லாமு — மென்னுள்ளறிந் திருந்து
மென்னே நின்னுள்ள — மிரங்கிலையே சற்குருவே 226

மாத்தகை யோர்தந்த — மனத்தை யடக்குதற்கே
ஆத்தனையே யேத்தி — யடைகின்றார் சற்குருவே 227

விடாத்துன்பப் பாழ்ங்கடலில் — வீழாம லென்னைக்
காடாட்சஞ் செய்தாள்வாய் — கருணையுள்ள சற்குருவே 228

பேதையுறு மென்னெஞ்சம் — போர்த்திருக்குமொரு
தூதையறி வித்தாற் — சுகம்பெறுவேன் சற்குருவே 229

ஆணவத்தைத் தீர்த்தென்னை — யாட்கொள்ள நின்னுருவைக்
காணவைத்தா லென்றன் — கலிதீருஞ் சற்குருவே. 230

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

கற்புடைய பெண்டிர்

திருமதி. அனந்தலட்சுமி சுப்பிரமணியம் அவர்கள் B. SC.,
முதுகலை வகுப்பு (தமிழ்), இரண்டாம் ஆண்டு,
இராணிமேரிக் கல்லூரி, மைலாப்பூர்.

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்". —வாழ்க்கைத்துணை நலம்.

என்று கற்பின் திண்மையை — பெண்மையின் வலியைப் பற்றிக் கூறிப் போந்தார் நம் செந்நாப்போதார். ஆம்! இந்தக் கற்பின் திண்மையால்தான் நம் நாட்டில் வானம் பொய்யாது வளம் செழித்து இருந்தது. இதனால் தான் நம்நாடு உத்தமர் போற்றும் உயரிடமாக விளங்கியது. பெண்டிரும் தம் கற்பின் திண்மையால் மண்ணோர்க்கு மட்டுமல்ல, விண்ணோர்க்கும் உயர் விருந்தானார்கள். இப்பூவுலகிலும் அன்று கோயில்களில் வைத்துப் பூசிக்கப்பட்ட அப்பெரும் பெண்டிர், இன்று மக்களுடைய அழியா உளக்கோயிலில் சிரிய இடம் பெற்றுப் போற்றப்படுகிறார்கள். இத்தகைய உயர்ந்தோர் வாழ்க்கையை யெல்லாம் காண்கிறான் கவிஞன். தம்முடைய கற்பனை உலகில் படைக்கும் பெண்களையெல்லாம், இப்பெண்களைப் போலவே படைத்து விடுகிறான். நம் பெண்களின் குருதியில் கலந்து செல்லும் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற நாற்குணங்களும் கவிஞனின் கற்பனைமாந்தரின் குருதியில் கவிஞனால் பாய்ச்சப்படுகிறது. அப்பொழுது அந்தக் கவிதை உலகில் பெண்களை-பெண்மையைப்போற்றும் உயர்கவிதையாய் விடுகிறது. இவ்வாறு பெண்மையின் பெருமையைப் பறைசாற்றும் உயர்காவியம் சிலப்பதிகாரம். இந்தப் பெயரே பெண்ணைத்தானே நினைவூட்டுகிறது! இந்தக் காவியத்தில், பெண்களின் கற்புத்திறனை நலனுற விளக்கியுள்ளார் சேரலன் தம்பி. அவர்காட்டும் மூவர் பொறையும் அடக்கமும் நிரம்பிய கொள்கலமான கண்ணகி,

தன் கணவனுக்குத் துன்பம் நேர்ந்த ஞான்றே துர்க்கையென மாறி. பின் தன் கற்பின் திறத்தால் ஒரு பாண்டிய நாட்டை அழித்தாள். மற்றவளோ, கணிகையர் குலத்தில் சேற்றில் அலர்ந்த செந்தாமரையாய் ஒருவனுக்கே ஆட்பட்டு அவனை இழந்த பின்னும் குலத்தொழிலில் ஈடுபடாது பின் துறவறம் ஏற்ற மாதவி. மூன்றுவளோ, பாண்டியக் கோமானுக்கு உகந்த அரசியாய் வாழ்ந்து பின் அவன் உயிர் நீங்கிய மாத்திரையே தன்னுயிரை நீத்த பாண்டியன் தேவி. இவர்கள் மூவர் தாம் இளங்கோவின் படைப்புக்கள் - மிகச் சிறந்த படைப்புக்கள் - மிக உயர்ந்த படைப்புக்கள். இவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் சிறிது காண்போம்.

இளங்கோவடிகள் தம் சிலம்பில் முதல் காதையான மங்கல வாழ்த்துப் பாடலில் பாத்திரங்களை அறிமுகப்படுத்துங் காலத்தில் முதலில் கண்ணகியையே வருணித்து அறிமுகப் படுத்துகின்றார். அதற்குக் காரணம் காட்டுகிறார் அடியார்க்கு நல்லார் மிகச் சிறந்த முறையில். "கண்ணகியை முற்கூறினார், பத்தினியை ஏத்துதல் உட்கோளாதலான்" என்பர். ஆம்; பெண்ணின் சீர்மையை கண்ணகி வழியாகப் போற்ற எழுந்தது தானே இந்தப் பனுவல்! இந்தப் பெண்மைக்குரிய இலக்கணங்கள் உடையவளாகத்தான் கண்ணகி காட்சி யளிக்கிறாள். அவளைக் காணும் பொழுதெல்லாம் ஆழ்கடல் என்று எண்ணும்படி தான் உள்ளது. அவள் குலத்திற்கு ஏற்ப, அடக்கமுடையவளாய் ஆழ்ந்த நோக்கும், உயர்ந்த எண்ணமும் உடையவளாய் விளங்குகிறாள். பின்புதான் கண்ட கனவைப்பற்றித் தேவந்தியிடம் கூறுகிறாள். அப்பொழுது அவள் இப்பிறவியில் மட்டுமல்லாது வரும் பிறவியிலும் சேர்ந்து கணவனுடன் வாழச் சோம குண்டம், சூரிய குண்டம் என்ற இரு குளங்களில் நீராடி இறைவனைப் பரவவேண்டும் என்று கூறுகிறாள். அதற்கு கண்ணகி கூறும் பதில் "பீடு அன்று" அவ்வளவுதான். இதில் எவ்வளவு திண்மை 'கற்பின் உரம்'! அக்காலத்தில் கற்புடையவர் என்றால், தெய்வம் தொழாது கணவனைத் தானே தொழுதெழ வேண்டும்! இத்தகைய கற்புக்கரசிதானே கண்ணகி; அவள் பேசும் ஒரு சில சொற்களே அவளுடைய கற்பின் திண்மைக்கு முதலடிப்படையான அடக்கத்தைக் காட்டும். அவளைப்

புகார்க் காண்டத்தில் சந்திக்கும் காலத்தில் பேசுவது எல்லாம் மிகமிகக் குறைந்த அளவே. அதுவும் கோவலனுடன் பேசும் சொற்களை எண்ணிப் பார்த்தால் ஐந்து அல்லது ஆறுக்குமேல் போகாது. தன் கனவைப்பற்றித் தேவந்தியிடம் கூறும்போது ஏதோ சில வரிகள் பேசி விடுகிருள். ஆனுல் இதே அடக்கம் மிகுந்த கண்ணகி, அவன் கொலையுண்டபின் சீறி எழுந்து அவன் மேல் எழுந்த அவப்பெயரை நீக்க அவலமுடன் எழுந்து ஊரைக் கூட்டி நியாயம் கேட்கிருளே. பின்னும், முன்பின் தெரியாத மன்னனுடன் வாதாடி வென்று ஒரு மாநகரையே அழித்து விடுகிருளே! இவை யெல்லாம் சாதாரண பெண் செய்யக் கூடும் செய்கையா? இவள் கற்பின் திண்மை யெல்லாம் திரண்டு வந்தமையால் தான் உலகம் வியக்கும் சாதனை புரிய முடிந்தது. அதனுல்தான் அவளைக் கற்புக்கரசி என உலகம் போற்றுகிறது.

இவளுடைய கற்பை இரண்டாம் வகைக் கற்பு நெறியான இடையாகு கற்பு அல்லது மறக் கற்பு என்பர். கணவன் மாண்ட வுடனே உயிர்நீத்து விடுதல் தலையாய கற்பு. கணவன் மறைந்த பின் தீக்குளித்து அல்லது உண்ணு நோன்பு நோற்று உயிர் விடுதல். இது இடையாய கற்பு அல்லது மறக் கற்பு என்பது. கணவன் இறந்தபின் உயிர்விடாது உயிர் தாமாக நீங்கும் வரை, கைம்மை நோன்பு நோற்றல் கடையாகு கற்பு. கணவன் இறந்த மாத்திரயே உயிர் நீங்காமையால் அது மறக் கற்பு எனப் பட்டது. ஆனுல் அவள் உயிர்விடாது இருந்தமைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. அவளுக்கு அவள் கணவன் கள்வனல்லன் என்பது உறுதியாகத் தெரியும். ஆகையால் அவன் தனக்கு என்னதான் தீமை விளைத்திருந்தாலும், உல கோர்க்கு அவன் நல்லவன் என்று பறை சாற்றவே வாழ்ந்தாள். உலகிற்கோர் நீதியைப் புகட்டிய பின்பு தான் விண்ணை அடைந் தாள். இவ்வாறின்றி அவள், தன் கணவன் வழிச்சென்றிருப்பின் உலகம் கோவலனுக்காகப் புண்பட்டுப் போய் இருக்கும். உலகில் நீதி என்பதே வாழ வழியில்லாமல் போய் இருக்கும். இவர்கள் கதையும் உயர் கதையாகியிராது. கண்ணகியின் வாழ்க்கை சாதாரணப் பெண்ணின் சோகக் கதையாகத்தான் வாழ்ந்திருக் குமே அன்றி வீரப்பெண்ணின் கற்பின் திறன் காட்டும் உயர் சரிதமாக இருந்திருக்கமுடியாது.

மற்றென்று, எல்லோரையும் ஆட்டி வைக்கும் ஊழ் இவளை யும் ஆட்டி வைக்கத் தயங்கவில்லை. இவள் முன் சன்மத்துப் பலனல் ஈரெழு நாட்கள் கைம்மையுடன் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் இவள் புகழ் பரவும் என்ற வினையால் இவள் வாழ்ந்து மறைந்தாள்.

இவளைப்போல் கற்பிற் சிறந்தவளாய்க் காட்சியளிப்பது மாதவி. இவள் கோவலன் வாழ்க்கையில் பிணைக்கப்பட்ட மற்றொரு மங்கை. இவள், ஆடல் பாடல் அழகு இவற்றில் வல்லவள். இவளைக் கோவலனுடன் ஆடல் வழியாகச் சேர்த்த ஊழ் இவர்கள் இருவரையும் மீண்டும் சேராவண்ணம் பாடல் வழியாகப் பிரித்தது. தன் அரங்கேற்றத்தின் போது பெற்ற பச்சை மாலையை ஆயிரத்து எண் கழஞ்சுக்கு இவனுக்கு விற்க, அதற்குப்பதில் இவன் உள்ளத்தைப் பெற்றுள். கோவலன் விடுதல் அறியா விருப்பினனுக இருக்க, அவனை இவள் தன் கொண்ட கணவன் என்றே எண்ணினுள். அவள் தன் குடிப் பிறப்பால் உணர்ந்த கலையைப் போற்றினுளே அன்றி குடியின் பழக்க வழக்கங்களையும் ஆசாரங்களையும் அறவே வெறுத்தாள். உலகத்தாரெல்லாம் வெறுக்கும் அக்குடியில் பிறந்தவள் தன்னை மக்கள் போற்றும் குடிமகளாக மாற்ற விரும்பினுள். அவள் சேற்றில் பிறந்த செந்தாமரை, குப்பையில் மின்னும் மாணிக்கம். கோவலனைக் கண்டு மணந்தாள். பின் அவன் தனக்கே உரிய வன். தான் அவனுக்கே உரியவள் என்ற கொள்கை அவள் உள்ளத்தில் ஆழப்பதிந்து விட்டது. அவர்கள் அன்பின் சின்ன மாக, அழகிய பெண் மகவைப்பெற்றுள். தன் குலத் தொழிலுக் காகக் கற்றுக் கொடுக்கப்பட்ட ஊடலும் கூடலும் இவன் ஒருத்தனுக்கே உரியது என்பாள். ஆனல் இந்திர விழாவின்போது கோவலன் சலிப்புற்றுக் காணப்பட்டான். இவன் சலிப்புக்குக் காரணம் இவளுக்குத் தெரியவில்லை. ஒருவேளை தான் பெற்றுற் போல் இருந்த உரிமையை மற்றவள் பறித்துக் கொண்டாளோ என்ற பேரச்சம் அவள் உள்ளத்தை நிரப்புகிறது. ஒரு பொருளைப் பெறுதல் என்பது அரிது. அதிலும் கிடைக்காது என்று எண்ணி யிருந்து கிட்டினுல் பெரும்பேறு வேறு எதுவும் இல்லை. ஆனல் அந்த அரிய பொருள் கிடைத்து மீண்டும் பிரிந்துவிட்டால் அதனல் அடையும் துன்பத்திற்கும் எல்லையில்லாது இருக்கும்.

அந்தத் துன்பத்திற்குப் பெருது இருத்தலே சிறந்தது எனத் தோன்றும். தனக்கு எங்கே இழப்பு ஏற்பட்டு விடுமோ என்றஞ்சி வருந்துவாள். அவன் பாடும் கானல் வரி, அவள் வருத்தத்தை மிகுதிப் படுத்திவிட்டது. ஆகையால் தன்னுடைய உரிமைப் போராட்டத்தைத் தொடங்குகிருள். அவன் பாடினுற் போலவே பாடுகிருள். "நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்" என்று தன் அன்பின் ஆழத்தை விளக்குகிருள்.

"தூக்காது துணிந்த இத் துயரெஞ்சு கிளவியாற்
பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடற் தெய்வ!நின் மலரடி வணங்குதும்"

என்று இறைவனிடம் அவன் பொருட்டாகவும் வணங்குகிருள். இவன் தன்னைப் பிரிந்த பின்னும் ஒரு தலைவனை இழந்த தலைவி போலத்தான் துன்புறுகிருள். கோவலன் தன் மனைவியுடன் தான் மதுரை சென்ருன் என்பதைக் கேட்டு தன் நிலைமையை எண்ணித்தேற்றிக் கொண்டாளே தவிர தன் குலத்தொழிலைத் திரும்பவும் ஏற்கவில்லை. கோவலன் இறந்த பின்னும் தன் உயிரை நீக்க வழிதெரியாது புத்த மடத்தில் சேர்ந்து துறவியாகிருள். தன் மகளையும் அறவழிப் படுத்துகிருள். இவள் செவிகள் சித்திராபதியின் கடுஞ்சொற்களுக்கும், இன்சொற்களுக்கும் மரச்செவிகளாகின்றன. சமுதாயத்தின் எதிர்ப்பையும் கலையைத்துறக்க வேண்டிய ஒரு நிலையையும் தாங்கும் சக்தி இவளுடைய கற்பின் திண்மையால் எழுந்தது. இவள், கற்பைச் சமுதாய ஊழலுக்கும் செல்வச் சிறப்புக்கும் விற்றிருந்தால் மாதவி, உலகம்போற்றும் உத்தமி ஆகியிருக்க மாட்டாள். இவளால் வாழ்ந்த மணிமேகலையும் துறவு ஏற்காது, தன்குலத் தொழிலிலேயே ஈடுபட்டிருப்பாள். இதன் பலனுக மணிமேகலை என்ற உயர் காவியமும் இவ்வுலகில் தோன்றியிருக்காது.

மூன்ருவதாக இளங்கோ காட்டும் கற்புக்கரசி உயர்சால் பாண்டியனின் கோப்பெருந்தேவி. அவள் கணவன், இழைத்த அநீதியால் வளைத்த செங்கோலை நிமிர்த்த உயிர்துறக்க "மன்னவன் செல்வுழிச் செல்க யானென" அவன் பின்னே உயிர்விட்ட பெருங்கோப்பெண்டு. இவள் உயிர் விட்டதைத் தலையான கற்பு எனக் கூறி ஆன்ருேர் போற்றுவார். இவளுக்குக்

கண்ணகிபோல் தன் கணவனுக்கு ஏற்பட்ட அநீதியை - மாசை நீக்க வேண்டிய பொறுப்பு இல்லை. இவள் பெருங்குடும்பத்தில் பிறந்தவள். தன் கணவனுக்கு நேர்ந்த பெரும் இழுக்கு இவளை யும் தானே சாரும்! அவன் இறக்க இவள் உயிர் வாழ்தல் நலனன்றே. ஆகையால் இவள் மாண்டாள். இவளால்தான் இக்கொடிய தீவினை நேர்ந்தது. அத்தீவினையே இவள் உயி ரையும் உண்டது.

ஆக, இம்மூவரும் சிலப்பதிகாரம் என்று உலகம் போற்றும் நாடக உலகத்தில் நடமாடும் உயர்குலப் பெண்கள். இவர்கள் மூவரும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நிலையில் வாழ்ந்த னர். இவர்கள் அனைவரையும் ஒன்றாகச் சேர்த்தது கற்பெனும் திண்மைதான். இவர்கள் வாழ்க்கையைப் படித்தவுடன் ஆண் உள்ளம் பெண்ணின் பெருமையை எண்ணி விம்முகிறது. பெண் உள்ளமோ, தங்களுக்கு உயர்வு தேடித்தந்த இம்மூவரைத் தெய்வமாகக் கொண்டு தலைவணங்குகிறது.

★ திருவிசைப்பா ★

திருப்பல்லாண்டு

[ஒன்பதாம் திருமுறை]

★ தெளிவுரை ★

புதிய பதிப்பு

(குரோதி ஆண்டு மார்கழித் திருவாதிரை வெளியீடு)

376 பக்கம் வெள்ளைத் தாள். தனிப் பிரதி அடக்க விலை ரூ. 1-50

ஒரேசமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

(தபால் செலவு வேறு)

கிடைக்குமிடங்கள் :-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம். (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராச விலாசம்"
53, பிள்ளையார் கோயில் தெரு: திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை-5

பழனி முருகன் பிள்ளைத் தமிழ்

பேராசிரியர்: திரு. E. S. வரதராஜய்யர், அவர்கள் B. A.
பூனா.

[மலர் 16. இதழ் 3-ன் தொடர்ச்சி]

அம்புலிப்பருவம்

ஒரு கலை நினைக்கதூஉந் தேயுமால் உணரிவன்
ஒப்பில் பல கலைகளுடையான்
ஊனக் களங்க மொன் றுண்டுனக் கங்கிவற்
கொரு களங்கமுமில்லை காண்
பெருகலை யோலிடச் செய்வைநீ யுள்ளன்பு
பெருகலைச் செய்வ னெம்மான்
பேசில் நீ கதிரவன் ஒளியாற் பிறங்குதி
பேரெழிற் சோதியிச் சேய்
வருகலை மானென்று மருவினை நீ யிவன்
வள்ளிமான் மருவு மம்மான்
மலர்தலை யுலகிருள் மாற்றுவை நீ யிவன்
மனவிருள் மாற்று மழகன்
அருகலைக் கொண்டொழுகும் அன்பருக் கமுதிவன்
அம்புலீ யாடவாவே
அருமுனிவர் துதிசெய்யும் பழனிமலை யதிபனோ
டம்புலீ யாடவாவே 7

சிற்றிற் பருவம்

ஒளிசெய் மணலின் எரிதுரும்பா
உயருட்டாணி வயிர மடுத்
துவமை நீங்கும் அரதனத்தான்
விளக்க மேற்றி யுலை யமைத்து

வெளிசெய் முத்தின் உலைப்பெய்து
பவளப் பருப்பே வெஞ்சனமா
மேலா அமைத்து மரகதமா
மிலையில் விரும்பி மிகப்படைத்தே
அளிசெய் குமர முருகநினை
யருமை விருந்தா வெமக்குமண
வாள குக அணையவெணி
யகமே-மகிழ்ந்தேம் அடியருளம்
தெளிசெய் திடுவாய் சிவகுமரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருவார் பழனி மலையழகா
சிறியேம் சிற்றில் சிதையேலே 8

சிறுபறைப் பருவம்

மத்த மனத்த வுணர்திட நெஞ்ச
மலைந்து குலைந்திடவே
வானவர் வாழ்வு நிலைத்த தெருவுள்
மகிழ்ந்து புகழ்ந்திடவே
நத்தணி கானருள் அந்த ணயன்மேய்
நடுங்கி ஒடுங்கிடவே
நவில் குரு குப்பெயர் கிரியுர மேகி
நலிந்து மெலிந்திடவே
புத்த ரொட மணர்கள் புத்தி கலங்கிப்
புழுங்கி யழுங்கிடவே
புவிதனில் அறமருள் அன்பொடு நீதி
பொருந்தி யிருந்திடவே
முத்தமிழ் கும்ப முனிக்கருள் முனைவ
முழக்குக சிறுபறையே
முதுபழ குபுரி தனில்வளர் முருக
முழக்குக சிறுபறையே. 9

(தொடரும்)

எல்லோரும் தமிழ்த் தொண்டர்கள்!

புதுமையான ஒரு பணிக்கு உங்கள் அனைவரையும் அழைக்கிறது தில்லித் தமிழ்ச் சங்கம்

தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் செய்வதற்காக, 'தமிழ் ஆராய்ச்சி அரங்கம்' ஒன்றை ஏற்படுத்தி உள்ளது தில்லித் தமிழ்ச் சங்கம். நிரந்தர மான பயனும் மதிப்பும் உள்ள தமிழ்ப் பணிகள் சிலவற்றை யாவது செய்வதற்கு ஆராய்ச்சி அரங்கம் திட்டங்கள் வகுத்து வருகிறது. அவைகளில் ஒன்றாக, தமிழ் மக்கள் அனைவருமே பங்குகொள்ளத் தக்க ஒரு திட்டம் உருவாகியுள்ளது.

தமிழகத்தில் தமிழே ஆட்சிமொழியாகவும் பாடமொழி யாகவும் வரப்போகிறது. அது ஒரு நாளிலோ இரண்டு நாளிலோ ஆகிவிடக் கூடிய காரியமல்ல. தமிழின் தகுதியை மிகுதிப்படுத்தக் கூடிய பலதுணைப் பணிகள் நடந்தால்தான், தமிழின் மூலமே எல்லாவற்றையும் நடத்தக் கூடிய ஆற்றலைத் தமிழ் மக்கள் பெறுவார்கள். ஆட்சியைத் தமிழில் நடத்தவும், பலதுறைப் பாடங்களையும் தமிழில் எழுதிக் கற்றுத் தரவும் பலபல ('டெக்னிகல் ட்டெர்ம்ஸ்' என்னும்) கலைச் சொற்கள் வேண்டும். அவைகளை மற்ற மொழிகளிலிருந்து கடன்வாங்கப் புறப்படும் முன்னதாக, அத்தகைய சில தமிழ்ச் சொற்களாவது நம்மிடம் உண்டா என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

உழவு, தச்சு, வியாபாரம், வைத்தியம், கட்டிடம், கொடுக்கல் வாங்கல் முதலிய தொழில்கள் சம்பந்தப்பட்ட நூற்றுக் கணக்கான தமிழ்ச்சொற்களை, நமது தமிழ்க் கிராமங்களில் இப் போதும் பேச்சுவழக்கில் கேட்கிறோம். அவைகளைத் தொகுத்து வரிசைப்படுத்திப் பார்த்தால், புதிய துறைகளுக்கு வேண்டிய பல தமிழ்ச் சொற்கள் கிடைக்கும் என்பது நிச்சயம். இதைச் செய்யத்தான் ஆராய்ச்சி அரங்கம் தமிழ் மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது............

நீங்கள் செய்ய வேண்டியது: மேலே சொன்ன பல தொழில்களைப் பற்றிய சொற்களை அடிக்கடி உங்கள் உங்கள் ஊர்களில் கேட்பீர்கள். அவைகளைக் குறித்துக்கொள்ளுங்கள்; அவைகளையே மற்ற ஊர்க்காரர்கள் வேறு சொற்களால் குறிப்பது உங்களுக்குத் தெரிந்தால், இந்தச்சொற்களுடன் அவைகளையும் எழுதிக் கொள்ளுங்கள். ஆங்கிலம் தெரிந்தவர்கள் இச்சொற்களுக்குச் சரியான ஆங்கிலச் சொற்களையும் குறிப்பது நல்லது. இவ்வாறு நீங்கள் சேகரித்த சொற்களை, அவ்வப்போது, கீழே கொடுத்துள்ள முகவரிக்கு அனுப்புங்கள். சொற்களை எழுதி அனுப்பும் போது அவை எந்தெந்த ஊர்களில் வழங்குகின்றன என்பதையும் மறவாமல் குறிப்பிடுங்கள். கடைசியாக, உங்கள் முகவரியைக் குறிப்பிட மறந்து விடாதீர்கள்........

சேகரித்த சொற்களைத் தகுந்த அறிஞர்களின் உதவியுடன் வரிசைப்படுத்தி, தில்லித் தமிழ்ச் சங்கம் வெளியிடும். அரசாங்கம் அல்லது மற்ற நிறுவனங்கள் முன்வந்தால், அவர்கள் மூலமாக வெளியிடச் செய்யலாம் என்பதும் திட்டம்.

ஆராய்ச்சி அரங்கம், தில்லித் தமிழ்ச் சங்கம்,
பாராளுமன்ற வீதி, புதுதில்லி–1.

DELHI TAMIL SANGAM, Parliament Street, New Delhi.

இலவச வெளியீடு :

★ ஆறு நீதி நூல்கள் ★

சிறுவர் சிறுமியர்களை நன்னெறிப்படுத்த ஸ்ரீ குமரகுருபரர், ஔவையார், சிவப்பிரகாசர் போன்ற அருளாளர்கள், பெருங்கருணையுடன் மிக எளிய நடையில் அருளிச்செய்த ஆறு நீதி நூல்கள் இதன்கண் அடங்கியுள்ளன. இது ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளின் 277-ம் ஆண்டு நினைவு மலராக எல்லோருக்கும் இலவசமாக வழங்கப்பெறுகிறது. அன்பர்கள் பெற்றுப் பயன் அடைவார்களாக.

சேக்கிழார்*

திரு. K. M. வேங்கடராமையா அவர்கள், M.A., B.O.L.,
திருப்பனந்தாள்.

மலர் 16. இதழ் 4-ன் தொடர்ச்சி

புராணத்துக்கு இட்ட பெயர்

"இங்கிதன் நாமங் கூறின்........திருத்தொண்டர் புராணம் என்பாம்" என்ற சேக்கிழார் வாக்கின்படி இந்நூலுக்குத் திருத்தொண்டர் புராணம் என்பது சேக்கிழார் இட்ட பெயராதல் கூடும். 14-ம் நூற்றுண்டில் வாழ்ந்த உமாபதி சிவாசாரியார் இந்நூல் பாடிய வரலாற்றைத் திருத்தொண்டர் புராணவரலாறு என்று தாமே பெயரிட்ட நூலில் 'சேண்டகைய திருத்தொண்டர் புராணமெனப் புராணத் திருமுறைக்குத் திருநாமம் சீர்மைபெற அமைத்திட்டு' (செ. 53) என்று பாடியிருக்கின்றமையின் இந்நூலுக்குத் திருத்தொண்டர் புராணம் என்பதே முன்நாளிலும் வழங்கிய பெயராகக் கோடல் பொருந்தும். 'எடுக்கு மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்'என்ற சேக்கிழார் வாக்கின்படி இதற்குப் பெரிய புராணம் என்ற பெயர் வந்தது என்று கூறுவாருமுளர். ஏனைய புராணங்களினும் சிறந்து விளங்கும் பெற்றியுடைத்தாதலின் இந்நூற்குப் பெரிய புராணம் என்ற பெயர் சாலவும் பொருந்தும்.

இப்புராணத்துக்கு ஆதரவுகள்

சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகை இப்புராணத்துக்கு முதல் நூல். நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி வழி நூல். இப்புராணம் அவற்றின் வழியே வந்த விரிநூல். மற்றும் வித்தகப் பாடல் முத்திறத்து அடியார் பாடிய திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழாகிய தேவாரங்களும், காரைக்

காலம்மையார் அருளிய அருள் நூல்களும், சேரமான் பெருமாள் நாயனுர் போன்றவர்கள் அருளிய நூல்களும், செவிவழிச் செய்திகளும், இந்நூலுக்கு ஆதரவுகளாம். உமாபதி சிவாசாரியாரும் இவற்றையெல்லாம் இந்நூலுக்கு உறுப்புக்களாகவும், பொருள்கோள் உயிராகவும், விருத்தப்பா உடலாகவும் கொண்டு நடந்தது என்று சுவைபடக் கூறுவர் (செ. 81).

காலம்

அநபாயன் : சேக்கிழார் தம்காலத்து அரசனைத் தம்புராணத்தில் பத்து இடங்களில் குறித்துள்ளார். அப்பத்து இடங்களிலும் அநபாயன் என்றே குறிக்கின்ருர். சேக்கிழார் புராண ஆசிரியர் (உமாபதி சிவம்) ஒரிடத்தில் (செய்யுள் 98-ல்) அநபாயன் என்று குறிக்கின்ருர். இவ்வாசிரியர் அபயன் என்று (செ. 59-ல்) குறித்தாற்போலவே சேக்கிழாரும் இரண்டிடங்களில் அபயன் என்று குறித்துள்ளார். பெரிய புரர்ணத்தில் பத்து இடங்களில் அநபாயன் குறிக்கப் பெற்றிருத்தலின் அன்னவனே சேக்கிழார் காலத்தரசன் என்று துணிந்து கூறலாம். அநபாயன் பேரம்பலம் பொன்வேய்ந்தவன் என்று சேக்கிழார் பெருமான் செப்புவர். அவ் அநபாயனுக்குத் திருநீற்றுசோழன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

அநபாயன் யார்? இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய 7-ஆம் ஆட்சியாண்டிற்குரிய திருவாரூர்க் கல்வெட்டில் (269 of 1901) "ஆடிய நம்பிக்கும் பரவை நாச்சியார்க்கும் அர்ச்சனு போக இறையிலியாக அநபாயநல்லூர் என்னும் திருநாமத்தால்" என்ற பகுதியாலும், திருவாரூரிலுள்ள வடமொழிக் கல்வெட்டொன்றில் (73 of 1890) "வியாக்கிராக்ரகாரா ஹேமசபா நடேச பாதாரவிந்த மதுப அநபாய் நாமாஞ்"* என்ற பகுதியாலும், இவனது 12-ம் ஆட்சி யண்டுக்குரிய களத்தார் கல்வெட்டில் (346 of 1911) இவனது திருமந்திரவோலே அநபாய மூவேந்தவேளான் என்று காணப்படுவதாலும், அநபாயன் என்ற சிறப்புப்பெயர் இரண்டாங் குலோத்துங்க சோழனுக்கே உரியது என்பது உறுதி யெய்தும். இவ்விரண்டாங் குலோத்துங்கசோழன் கி. பி. 1133 முதல்

* இப்பகுதியின் பொருள் :- சிதம்பரத்தில் பொற்சபையில் உள்ள நடேசர் பெருமானின் திருவடித் தாமரைகளில் ஊதும் வண்டாகவுள்ள அநபாயன் என்ற பெயருடையவன்,

கி. பி. 1146 வரை அரசாண்டவன்; விக்கிரம சோழனுடைய மகன்; இரண்டாம் இராசராசனுடைய தந்தை.

திருமழபாடிக் கல்வெட்டு : சேக்கிழார் எக்காலத்தில் வாழ்ந்தார் என்பதை அறிய இரண்டாம் இராசராசனுடைய 17-ம் ஆம் ஆட்சி யாண்டிற்குரிய கல்வெட்டுச் சான்று பகர்கின்றது. அக் கல்வெட்டுப் பகுதியானது :–

"சயங்கொண்ட சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழ வள நாடான புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர் சேக்கிழான் மாதேவடிகள் இராமதேவனுன உத்தம சோழப் பல்லவராயன்" (85 of 1920). என்பது.

பாலருவாயர் :— மூன்ரும் குலோத்துங்க சோழனுடைய இரண்டாம் ஆட்சியாண்டிற்குரிய கோட்டூர்ச் சாசனத்தில் (445of 1912) சேக்கிழார் பாலருவாயர் என்று ஒருவர் குறிக்கப்பெறுகிருர். சேக்கிழாருக்கு உத்தம சோழப் பல்லவராயன் என்ற சிறப்புப் பெயருண்மையை உமாபதி சிவாசாரியார் தாம்பாடிய சேக்கிழார் புராணத்தே குறிப்பிட்டமையாலறியலாம். சேக்கிழார்க்குப் பாலருவாயர் என்ற இளவல் ஒருவரும் இருந்தமையையும், சேக்கிழார் பெரிய புராணம் பாடிய பின்பு அரசர் பாலருவாயரை அழைத்து அவரையே தம் அமைச்சராகக் கொண்டார் என்றும் சேக்கிழார் புராணத்தில் உமாபதி சிவாசாரியார் பாடியுள்ளார். (செ. 98 - 99), இனிச் சாசனத்தில் கண்ட பாலருவாயரும், உமாபதி சிவாசாரியார் கூறிய பாலருவாயரும் ஒருவரே என்பதற்குத் தடையில்லை.

மாதேவடிகள்: இனித் திருமழ பாடிச் சாசனத்தில் கண்ட சேக்கிழாருக்கு மாதேவடிகள், இராமதேவன் என்ற சிறப்புப் பெயர்கள் இருந்தமை அக் கல்வெட்டால் அறியப்பெறுகின்றது. இச்சிறப்புப் பெயர்களை உமாபதி சிவாசாரியார் கூறவில்லை; எனினும், சேக்கிழாருடைய சிவபக்திச் சிறப்புக் கருதி மாதேவடிகள் என்று குறிக்கப்பெற்ருர் என்னலாம். உமாபதி சிவாசாரியார் 'குன்றை முனி சேக்கிழார்' என்றும் (செய் 84), 'அண்ட வாணர் அடியார்கள் தம்முள் அருந்தவந்தனில் இருந்தவர்' என்றும் (செய் 100) கூறியிருத்தலால், சேக்கிழாரை மாதேவடிகள் என்று சாசனம் குறித்தது சாலப்பொருந்தும்.

இராமதேவன்: சாசனத்தில் சேக்கிழாருக்கு இராமதேவன் என்ற பெயருண்மையைக் காண்கிறோம். சாசனத்திலுள்ள முறையைக் காணின் இராமதேவன் என்பது சேக்கிழாரது இயற் பெயராகக் கொள்ளத் தோன்றுகின்றது. 'இராமதேவன் என்பது வைணவப் பெயராயிற்றே! சிறந்த சிவபக்திச் செல்வம் வாய்ந்த தந்தை வெள்ளியங்கிரியார் இவருக்கு இப்பெயர் அமைத்திருப் பரோ?' என்ற ஐயம் எழக்கூடும். அறுபான் மும்மை நாயன் மார்களுள் நரசிங்க முனையரையரும், ஒன்பதாம் திருமுறை ஆசிரி யர்களுள் புருடோத்தம நம்பியும், சிவனடிமைத்திறம் உடைய வைணவப் பெயரினர் ஆவர். எனவே இராமப் பெயர் வைத்திருப் பினும் சாசனச் சேக்கிழார், பெரியபுராணம் பாடிய சேக்கிழா ராதற்குத் தடையின்று.

முடிந்தது முடித்தல்: இதுகாறும் கூறியவாற்ரான் இரண்டாம் இராசராசனுடைய 17-ம் ஆட்சியாண்டுக்குரிய திருமழபாடிக் கல்வெட்டில் கண்ட சேக்கிழாரே பெரியபுராணம் அருளிய சேக் கிழார் ஆவார் என்று கொள்ளலாம். இரண்டாம் குலோத் துங்கன் கி. பி. 1150 வரை அரசாண்டவன். இரண்டாம் ராச ராசனது ஆட்சி 1146 முதல் கணக்கிடப்பெறும். எனவே திரு மழபாடிக் கல்வெட்டு கி. பி. 1163-க்கு உரியதாகும். சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் சில ஆண்டுகள் அமைச் சராக இருந்து ஒய்வு பெற்று, இரண்டாம் இராசராச சோழ னுடைய காலத்தில் சோழ நாட்டிலேயே வாழ்ந்திருந்தவராதல் கூடும் என்றும், அங்ஙனம் வாழ்ந்த பொழுது திருமழபாடி முதலிய தலங்களில் அறங்கள் புரிந்தாரென்றும் கொள்ளலாம்.

சேக்கிழாரும் திருநாகேச்சுரமும்

சேக்கிழாருக்குச் சோழ நாட்டுத் திருநாகேச்சுரத்து எம் பெருமான் மீது மிக்க அன்பு உண்டு. அத்தலத்தைத் தனக்குரிய அபிமானத் தலமாகவும், ஆன்மார்த்த தலமாகவும் கொண்டார். அத்தலத்திலே பல காலும் தங்கியிருந்து பல திருப்பணிகள் செய்துள்ளார். அத்தலத்துத் திருக்கோயில் உட்பிராகாரம் தென்புறத்தில் சேக்கிழார், அவர்தம்பி பாலறுவாயர், அவர் தாயார் ஆகிய மூவருடைய உருவங்களும் எழுந்தருளுவிக்கப் பெற்று வழிபாடியற்றப் பெறுகின்றது. இத்தலத்தின் மேல்

தனக்குள்ள அன்பு காரணமாகத் தொண்டை நாட்டிலே குன்றத்தூர் எல்லையில் திருநாகேச்சுரத்தைப் போன்றதோர் கோயிலைக் கட்டி அவ்வூர்ப் பகுதிக்கும் திருநாகேச்சுரம் என்று பெயரிட்டார். அக்கோயிலில் சேக்கிழாருக்கும் தனிக்கோயில் இருக்கிறது. உமாபதி சிவாசாரியாரும் இச்செய்தியைப் பின் வரும் பாடலில்புகன்றுள்ளார்:—

"........ஆங்கவர் நீர்நாட்டு
நித்தனுறை திருநாகேச் சுரத்தில் அன்பு
நிறைதலினுல் மறவாத நிலைமை மிக்கார்" (செ. 18)

என்பதும்,

"தம்பதி குன்றத்தூரில் மடவ ளாகம்
தானுக்கித் திருக்கோயில் தாபித் தாங்கண்
செம்பியர்கோன் திருநாகேச் சுரம்போ லீதுந்
திருநாகேச் சுரமெனவே திருப்பேர் சாற்றி
அம்புவியில் அங்காங்க வைப வங்கட்(கு)
ஆனபரி கலம்திருநாள் பூசை கற்பித்(து)
இம்பர்புகழ் வளவனர சுரிமைச் செங்கோல்
இமசேது பரியந்தம் இயற்று நாளில்" (செ. 19)

என்பதும் அது.

சேக்கிழாரைப் பற்றிய நூல்கள்

இங்ஙனம் சைவ சமய உலகிற்கு ஆதவன் போன்ற சேக்கிழார் பெருமானின் வரலாற்றை உமாபதி சிவாசாரியார் இயற்றிய சேக்கிழார் புராணம் எனப்பெறும் திருத்தொண்டர் புராண வரலாறு என்னும் இலக்கியத்திலும், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கியத்திலும் நன்கு சுவைக்கலாம். மேலும் சைவ புராணங்களிலும், சைவத்தல புராணங்களிலும் சேக்கிழாரைப் பற்றிய தோத்திரங்கள் பல காணப்படுகின்றன. சேக்கிழாரைப் பற்றித் திரு சோமசுந்திர தேசிகர் அவர்கள் சைவசிகாமணிகள் இருவர் என்ற நூலில் உரைநடையில் வரைந்துள்ளார். திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம்

என்ற நூலையும் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் சேக்கிழார் என்ற நூலையும் இயற்றித் தந்துள்ளனர். டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார் பெரிய புராண ஆராய்ச்சி என்ற நூலிலும் திரு. மு. இராகவையங்கார் சாசனத்தமிழ்க்கவி சரிதம் என்ற நூலிலும், திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களும். சேக்கிழார் காலத்தை ஆராய்ந்துள்ளனர்.

முடிப்புரை

“ தாங்கும் வளவன் அநபாயன்
தங்கள் மணியாய் அவனமைச்சர்
தங்கள் சூளா மணியாயுத்
தமச்சோ ழப்பல் லவன்எனும்பேர்
ஓங்கும் படிகொள் விண் மணியாய்
உவக்கும் அடியார் சரித்திரமுற்(று)
உரைசெய்(து) அருள்சிந் தாமணியாய் ”

விளங்கும் சேக்கிழார் பெருமானின் மாபுராணமாகிய திருத்தொண்டர்புராணத்தை மக்கள் ஓதியுய்க!

ராகம் : தேவ் தாளம் : ஆதி

பல்லவி

சோதனை போதும் வேல்முருகா முருகா மனச்
சோர்வினித் தாளேன் தாளேன் ஐயா (சோதனை)

அனுபல்லவி

வேதனை தீரவழி யேதும் இல்லையோ (என்)
வாழ்வினில் இன்பம் இனியும் இல்லையோ (சோதனை)

சரணம்

முன்னம் நான்செய்த தீவினை பெரிதோ
முதியோர் தம்வசை மொழி தானிதுவோ
இன்னமும் உன்மனம் இரங்காததும் ஏனோ
பன்னிருகைக் குமரா குருபரநாதா உன் (சோதனை)

இயற்றியவர்

A. M. சிதம்பரசபாபதி தீட்சிதர்,
(லைவ். - செக்ரட்ரி) ஸ்ரீசபாநாயகர் கோயில்
சிதம்பரம்.

டில்லியில் திருநாவுக்கரசர் விழா

புது டில்லி,
27-4-'65.

"தெய்வத் திருவருள் பெற்ற ஞானசம்பந்தர், அப்பர் முதலானவர்களுடைய அருள்வாக்குகளைப் பாராயணம் செய்வதில் அளவற்ற நன்மைகள் உண்டு. அது எம்போன்ருர் வாழ்க்கையில் பல அனுபவங்களால் நிருபிக்கப்பட்டதாகும். பக்தியும் ஆர்வமும் கொண்டு செய்யும் பாராயணம் பெரும் பயன்தரும்." என்று இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் யுவராஜகுமார், திரு. காசிநாததுரை இங்கு நடந்த திருநாவுக்கரசர் விழாவில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

இவ்விழா தில்லி சைவப்பேரவையின் சார்பில் திரு. எம்.எஸ்.பி. சண்முகம் இல்லத்தில் நடைபெற்றது. இராமநாதபுரம் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர், திரு. என். அருணசலம் செட்டியார் விழாவுக்குத் தலைமை வகித்தார். தமிழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்க அலுவலர்களும், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மற்றும் ஆண் பெண் பலரும் விழாவுக்குத் திரளாக வந்திருந்தார்கள். திருமதி மீரா சேஷாத்திரி இறைவணக்கம் பாட விழாத் தொடங்கியது. குமாரிகள் கற்பகம், சரஸ்வதி சகோதரிகள் தேவாரம் பாடினர். டில்லியில் தமிழின் பெருமையும் சைவத்தின் பெருமையையும் பிறருக்குச் சொல்வது இவ்விழாவின் நோக்கமென்றும் சைவ, தமிழ் இலக்கிய நூல்களும் பாராயண நூல்களும் டில்லி மக்களுக்குக் கிடைப்பதற்காக ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் ஆதரவில் ஸ்ரீ குமரகுருபரர் சுவாமிகள் நூல் நிலையம் ஒன்றும் இங்கு தொடங்கப் பட்டிருக்கிறது என்றும் பாராயண நூல்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன என்றும் எம். எஸ். பி. சண்முகம் ஆரம்பத்தில் கூறி எல்லோரையும் வரவேற்ருர். தலைவர் தமதுரையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் இந்தியைக் கற்று வடநாட்டில் வந்து சமயக் கொள்கைகளைப் பரப்பியதையும் மற்றும் நாயன்மார்கள் வரலாற்றையும் சைவ சித்தாந்தப் பெருமையையும், திரு. காசிநாததுரை பலருக்கும் விளக்குவதையே பணியாகக்கொண்டு வருகிருர்

என்றும் வடநாட்டவர்களும் நம் சமயம் பற்றி அறிந்துகொள்ள மிகப் பெரிய அளவில் விழாக்களை நடத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டார். கார்ப்பரேஷன் நெருப்பணைக்கும் படைத்தலைமை அதிகாரி திரு. சிங்கார சுந்தரம் வழிபாடுகள் நடத்தினர். செல்வி ஜெயலக்ஷ்மி தேவாரம் பாட வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

விலை மலிவு அறிவிப்பு

குமரகுருபரர் வரலாற்றுப் படங்களும்
கந்தர்கலி வெண்பா விளக்கப் படங்களும்

இந்நூல் உயர்ந்த ரக ஆர்ட் தாளில் அழகிய 30 படங்கள் கொண்டது. ஒவ்வொரு படத்தின் கீழும், படத்தை விளக்கும் குறிப்புரை உண்டு. சித்தாந்தக் கருத்துணர்த்துவனவும், சிந்தனையைத் தூண்டுவனவும், கண்ணைக் கவரும் கவர்ச்சி மிக்கனவுமாகிய படங்கள் இவை. இதில் குமரகுருபரர் வரலாறு ஆங்கிலத்திலும், இந்தியிலும், தமிழிலும் அடங்கியுள்ளது. சிறுவர் சிறுமியர்க்குச் சமயப்பற்றும், தெய்வ பக்தியும், புராண அறிவும் காட்சியறிவின் வாயிலாகவே மறக்க முடியாத வகையில் புகட்டத் தக்கது, இந்நூல்.

இதன் விலை 0-50 பைசாவாக இருந்ததை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 277-வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டுப் பாதி விலைக்குக் குறைக்கப்பட்டு அதாவது 0-25 பைசாவிற்கு இது விற்கப்பெறும். புத்தக அஞ்சல் தபால் கட்டணம் 0-10 பைசா வேறு.

மதுரை மீனாக்ஷியின் ஆங்கிலேய பக்தன்!

'தபஸ்வி'

அழகான மதுரையில் சித்திரை, பூர்ணிமை நாளன்று மீனாக்ஷி-சுந்தரேஸ்வரர் கோயிலில் விசேஷ வழிபாடுகள் நடைபெறும்.

ஒரு சமயம் வழக்கம்போல் மேள-தாளங்களுடன் அலங்கரிக்கப்பட்ட தங்க அம்பாரியின் மேல் எழுந்தருளியிருந்த உற்சவ மூர்த்தியைச் சுமந்து கொண்டு, கோயிலிலிருந்து புறப்பட்ட யானை கலெக்டர் வீட்டு வாசலில் வந்து நின்றது.

ரௌஸ் பீட்டர் என்ற ஆங்கிலேயர் அப்போது கலெக்டராக இருந்தார். அழகான வாழ்க்கைத் துணைவி, துடிப்பான எட்டு வயதுப் பிள்ளை, ஆறு வயதுப் பெண் ஆகியோர்கொண்ட சின்னஞ்சிறு குடும்பம் அவருடையது. கை நிறைந்த சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த அவரது அதிகாரம் அந்த வட்டாரத்தில் கொடிகட்டிப் பறந்தது!

கலெக்டரின் மனைவி குழந்தைகளுடன் ஊர்வலம் பார்க்க வெளியே வந்தாள். சங்கரய்யர் என்ற சேவகரின் பராமரிப்பில் வளர்ந்து, இந்துக்களின் பழக்க வழக்கங்களில் ஈடுபாடு கொண்டிருந்த கலெக்டரின் மகன் ஜாக்கி பீட்டர் உத்சவமூர்த்திக்குக் கரம் குவித்து வணங்கி, யானைக்கு வாழைப்பழம் தந்து அதன் பாதங்களைத் தொட்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான்.

அதிகாரச் செருக்கும் நாஸ்திக மனோபாவமும் கொண்டிருந்த கலெக்டருக்குத் தன் பிள்ளையின் இந்தச் செய்கை கட்டோடு பிடிக்கவில்லை. ஜில்லாக் கலெக்டர் துரையின் மகன் சர்வசாதாரணமான வேலைக்காரனைப்போல நிலத்தின் மேல்

இக் கட்டுரை மதுரமித்திரன் பத்திரிகை அனுமதி பெற்றுப் பிரசுரிக்கப் படுகிறது.

நீண்டு படுத்து வணங்குவதா? அதுவும் ஒரு பிராணியின் கால்களைத் தொட்டு?

இதென்ன வெட்கக் கேடு?. அநாகரீகச் செயல்!

மூர்க்கனாகிய ரௌஸ் பீட்டர், வாழைப்பழத்திற்காக நீட்டிய யானையின் துதிக்கையின் மேல் காரி உமிழ்ந்து, மகனைத் தர தரவென்று வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு போனார்.

கோயிலின் பரம பவித்திரமான உத்சவ யானையின் மீது காரி உமிழ்ந்த பாவத்திற்குத் தன் எஜமானனுக்கு எத்தகைய தீமை நேரிடுமோவென அஞ்சிய தெய்வ பக்தரான சங்கரய்யர், 'தாயே மீனாக்ஷி! அஞ்ஞானியான என் எஜமானனின் அறிவீனத்தை மன்னித்துக் கொள்' என்று மனமுருக வேண்டிக் கொண்டார்.

சில நாட்களுக்குப் பின், அருகாமையிலிருந்த காட்டுக்குத் தன் சேவகனுடன் வேட்டையாடச் சென்றார், அவர்.

வண்ணக் களஞ்சியமான சிறகுகளைப் பரக்க விரித்து, பல ஆண் மயில்கள் நெஞ்சைக் கவருகின்ற வண்ணம் நடனமாடிக் கொண்டிருந்தன. ரௌஸ் பீட்டர் ஒரு புதருக்குப் பின்னாலிருந்து மறைந்திருந்து அமைதியாக இந்த ரம்மியமான காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

திடீரென்று மயில்கள் அனைத்தும் மிரண்டாற் போல் பதறிக்கொண்டு மேலே பறந்தன. உடனே பீட்டர் குறிவைத்து துப்பாக்கியினால் சுட்டார். எழிலார்ந்த மயிலொன்று சுருண்டு தரையில் விழுந்தது. அதை எடுத்துக் கொள்வதற்காக பீட்டர் நெருங்கினார்.

அதற்குள் என்ன இது? கார்முகிலைப் போன்றதொரு மாபெரும் ஆகிருதி எதிரே வந்துகொண்டிருக்கிறது. ஐயோ! காட்டு யானை! பீட்டரும் அவர் சேவகனும் ஒருகணமும் தாமதியாமல் பின் திரும்பி ஓடினர்!

வேகமாகத்தான் ஓடலாயினர். ஆயினும் பிளிறிக்கொண்டு அவர்களைத் துரத்திக் கொண்டு வந்த காட்டானைக்கும் அவர்

களுக்கும் இடையே இருந்த தூரம் வினாடிக்கு வினாடி குறைந்து வந்தது. ஓடிக்கொண்டிருந்த பீட்டரின் குல்லா கீழேவிழுந்து யானையின் கவனத்தைக் கவர்ந்தது. உடனே அது குல்லாவைத் துதிக்கையால் எடுத்து நிலத்தில் எறிந்து, காலினால் மிதித்து, தன் ஆத்திரத்தை வெளிப்படுத்திக் கொண்டது.

இதற்குள் தற்செயலாகக் கிடைத்த ஒரு சில நிமிடங்கள். அருகாமையிலிருந்த பெரிய மரமொன்றின் மேலேறித் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்கேற்ற சந்தர்ப்பமாக அவர்களுக்கு அமைந்தது.

யானை மரத்தை நெருங்கியது. தன் பலத்தையெல்லாம் பிரயோகித்து மரத்தை அசைத்தது. பயனில்லை. முயற்சி பல னளிக்காமற் போகவே அந்த யானை மரத்தின் அடியிலேயே காத்து நின்றது.

அவர்களுக்குச் செய்வகை தோன்றவில்லை. சேவகன், சங்கரய்யர் தன் மணிமாலையைக் கழுத்தினின்று கழற்றி, கையில் பிடித்தபடி, கண்மூடித் தேவி மீனாக்ஷியின் அஷ்டோத்தர ஜபம் செய்யத் தொடங்கி விட்டார்.

இதைப் பார்த்த கலெக்டர் ''ஐயோ, முட்டாளே! உன் பிரார்த்தனையைக் கேட்டு அந்த யானைதான் ஓடிவிடப்போகிறதா அல்லது, உங்கள் கடவுள் இந்த ஆபத்திலிருந்து உன்னைக் காப்பாற்ற வரப்போகிறாளா?'' என்று கிண்டலாகக் கேட்டார்.

சங்கரய்யர் இவற்றிற் கெல்லாம் செவி சாய்க்காமல் பிடி வாதத்துடன் பிரார்த்தனையைத் தொடர்ந்தார்.

என்ன விந்தை! சற்று நேரத்தில் மரத்தடியை விட்டு யானை மெல்ல விலகிச் செல்லத் தொடங்கியது!

''சீக்கிரம் இறங்கி ஓடுங்கள் ஐயா'' என்று கூறிய வண்ணம் சங்கரய்யர் மரத்தினின்று இறங்கி ஓடினார்.

கலெக்டர் இரண்டொரு வினாடிகள் தயங்கி, பின்னர் மரத் தினின்றும் இறங்கலானார். ஆனால் அவர் கீழே இறங்குவதற்குள்

யானை பிளிறிக் கொண்டு மரம் நோக்கி ஓடி வந்தது-கலெக்டர் உடனடியாக மரத்தின் மேல் மீண்டும் ஏறவேண்டியதாயிற்று.

எஜமானின் பக்கம் திரும்பிப் பார்த்த போது யானை வருவதைக் கண்டு சங்கரய்யர் தானும் வேறொரு மரத்தில் ஏறிக்கொண்டார்.

தானிருந்த மரத்திலிருந்தபடியே கலெக்டரை நோக்கிச் சொன்னார்: "ஐயா, அன்னை மீனாக்ஷியிடம் மன்னிப்பு வேண்டிப் பிரார்த்தனை செய்யுங்கள். என் தாய் உங்களை நிச்சயமாய்க் காப்பாற்றுவாள்."

ரௌஸ் பிட்டர் இப்போது உதவியற்ற நிலையில் இருந்தார். அதோடு அவரது நாஸ்திக உள்ளத்தின் அஸ்திவாரம் சற்றே ஆட்டம் கொடுத்திருந்தது. அவர் கரங்கள் அவரையும் அறியாமல் மீனாக்ஷியம்மன் கோவிலிருந்த திசை நோக்கிக் குவிய, இறைஞ்சினார். "அன்னையே! உனது பவித்திரமான யானையின் மேல் காரி உமிழ்ந்து, தாறுமாறாகப் பேசியதற்காக என்னை மன்னிக்கமாட்டாயா? இதுகாறும் என் உள்ளத்தை மறைத்திருந்த அஞ்ஞான இருளை அகற்றி, உன் அருள் நோக்கால் என்னைத் தயவுசெய்து குற்றமற்ற நல்வழியில் அழைத்துச்செல் அம்மா!"

என்ன பேராச்சர்யம்! யானை மெதுவாக அங்கிருந்து நகரத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தில் வெகு தூரம் போய் விட்டது. கலெக்டர் மரத்திலிருந்து இறங்கி, வீடுபோய்ச் சேர்ந்தார்.

அன்று முதல் அவர் மீனாக்ஷியம்மையின் தீவிரமான பக்த கோடிகளில் ஒருவராகி விட்டார்.

மற்றொரு நாள், நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. இடியும் மின்னலுமாக மழை நிற்கும் வழியாகக் காணோம். கலெக்டர் தம் காரியாலயத்தில் அமர்ந்து வேலையில் ஈடுபட்டிருந்தார்.

சோர்வுடன் அவருக்குத் தூக்கம் வந்தாற் போலிருந்தது. மறுவினடி அவர் செவிகளில், "இப்போது நீ இங்கிருந்து வெளியே போ," என்று அமானுஷ்யக் குரல் உத்திரவிட்ட உணர்ச்சி ஏற்பட்டது.

உடனே அவர் எழுந்து காரியாலயத்தை விட்டு வெளியே வந்தார். அவர் கட்டிடத்தை விட்டு வெளிப்படுவதற்கும், 'சட புட, தடபுட, பட்படீர்!" என்ற பேரிடி ஒன்று அவர் உட்கார்ந் திருந்த அறைக்கு மேல் விழுவதற்கும் சரியாக இருந்தது! அன்னையின் கருணையினுல் அவர் மயிரிழையிலே உயிர் தப்பினுர்!

பிறகு கலெக்டர் ரௌஸ் பீட்டர் மீனுக்ஷியம்மைக்கு, பத்து லட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள நகைகள் காணிக்கை செலுத் தினுராம்.

கிழக்கு இந்திய கம்பெனியின் சார்பிலும் 108 பவுனில் தங்கச் சங்கிலியொன்று காணிக்கையாகச் செலுத்த சிபாரிசு செய்தாராம்! இந்த நகைகள் மீனுக்ஷி ஆலயத்தில் இன்றும் இருக்கின்றன.

"ஞானசம்பந்தம்"
அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர் வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க் கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்.

உள்நாடு ரூ. 2 – 25 * வெளிநாடு ரூ. 3 – 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.
தருமபுரம், மாயூரம் P. O.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 4-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

56 கூற்றாயினவாறுவிலக்ககிலீர் கொடுமைபலசெய்தன
நானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும் பிரியாதுவணங்குவ
னெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியே குடரோடு
தொடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடில வீரட்டானத்துறை
யம்மானே.

Tradition connects our next stanza with a story of Apparswami being smitten with an inward disease when he forsook Saivism and became a Jain. The pain proved, says the legend, a convincing argument which reconverted him, whereupon he was promptly cured. But internal evidence proves this hymn to have been composed long after his return to Saivism. Nandi is the name of Siva's bull.

56 Thou takest not my deadly pain away,
My torments, Nandi - rider, never cease;
At Thy feet would I worship night and day,
But since my bowels writhe, and ne'er find peace,
I can no more! O Sire, to Thee I cry,
Who dwell'st by Kedila, in Athihai.

(தொடரும்)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.
(N.B. Copies available for sale at the above Press.)

பொருநைதரும் திருவமுதம்

திரு. பொ. முத்தரசு அவர்கள், M. A., B. T.,
தமிழ்த்துறைத் தலைவர், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்லூரி,
அருள்நந்திநகர் – ஸ்ரீவைகுண்டம்,

(ஆசிரிய விருத்தம்)

1 திருநிறையும் சிவநெறியின் சீர்த்தி முற்றும்
தெளிவாகச் சிந்தைகொளத் தேக்கிச் செவ்வேள்
குருபரனுய் அலைவாயில் அருளக் கொண்டு
குறைவின்றி ஐந்தாண்டில் கோத்துக் கூறும்
ஒருமைவளர் உயர்பாடல் உவந்து போற்றி
உவமையிலான் திருவருளில் உலகம் தோய
அருள்முனிவர் குருபரனுர் அருளால் பொங்கும்
அழகுதமிழ் பொருநைதரும் அமுதம் அன்றே?

(வேறு)

2 தொடுத்துரைக்கும் பழம்பாடல் தோய்பிள்ளைக் கவிதை;
தொன்மதுரைச் சொக்கருக்கோர் கலம்பகமாம் பாட்டு;
அடுத்தாரூர் வாழ்முதலின் அடிபோற்றும் மாலை;
அணிவேளூர்க் குமரனருள் அழகொளிரும் பாடல்;
எடுத்தாடும் திருவடியை இசைந்தேத்தும் கோவை;
எழில்திகழும் நீதிநெறி; யாப்புவகை எளிமை
மடுத்தொளிர மனங்கொள்ளும் வனப்புநிறை செய்யுள்;
வாழியருட் குருபரனுர் வாய்மொழிந்த வகையே!

3 தருமைவரு மாசில்லா மணியின்தாள் சார்ந்தார்
தலைவணங்கிச் சார்பெல்லாம் விடஞானம் ஓர்ந்தார்
அருமைதிகழ் அவரடியின் சீர்போற்றி ஆர்ந்தார்
ஆராத அமுதாகும் பண்டாரக் கோவை
உருகாத கல்மனமும் உருகிமிக நைந்தே
ஒன்றுகி நன்றுகி உண்மையொளி கண்டே
பெருவாழ்வு பெற்றுவக்கப் பேணியருள் செய்தார்
பெரும்பொருநைத் தடங்கரையின் பேர்சிறக்க வந்தார்.

4 குவித்தஇரு கையோடும் குழைந்துருகி நின்று
குருமுதல்வர் அடியிணையில் குவித்தபொருள் எல்லாம்
அவித்தொழுகும் புலனெளிரும் தேசிகரும் நோக்கி
அடிபணிந்த மாணவருக் காசிமொழி நல்கிப்
புவித்தலத்தில் அவைகொண்டு தமிழ்ச்சைவத் தொண்டு
புரியவட நாட்டினிடைப் போம்வண்ணம் அருள
அவிமுத்தத் திருநகரம் அடைந்துவிசு வேசர்
அருட்கழற்கோர் கலம்பகத்தைச் சூட்டியருள் பெற்றுர்.

5 ஆசிரியர் அடியிணையைத் தொழுதலைக் கொண்டே
அவராணை வழிநின்று அந்நாட்டில் வாழ்வோர்
பேசுமொழி கலைமகளின் பேரருளால் கற்றுப்
பேசியந்த நகராளும் அரசனுணை பெற்று
வீசுதிரைக் கங்கையெறி மேல்கரையில் மிளிரும்
வியன்கோவில் கேதாரக் கட்டமென நாட்டிக்
கூசியவர் செருக்கொடுங்கத் தவப்பெருமை காட்டிக்
குளிர்கங்கைக் கரையருகே திருமடமும் சமைத்தார்.

6 திருநெறியும் தீந்தமிழும் சிறக்கவரு தொண்டு
செய்தளித்தோர் தமிழ்நாட்டில் பற்பலர்என் ருலும்
பெருமையுறப் பிறநாட்டில் பிறமொழியைப் பேசும்
பெட்புடையோர் இடையேயும் புறச்சமயம் புக்க
ஒருமையுணர் வில்லாத உடும்பனையார் இடத்தும்
உற்றபெருங் கருணையிஞல் உயிர்இரக்கப் பண்பால்
அருமையென எல்லோரும் அகங்குழைந்து போற்ற
அறப்பணிகள் குருபரர்போல் செய்தவர்கள் யாரே?

7 காசிநகர்த் திருமடத்தில் குருபரனுர் நாளும்
கம்பரது தமிழ்க்கவிதைக் கவின்அனைத்தும் சொல்லத்
தேசுடைய இராமபிரான் திருப்புகழைக் கேட்டுச்
சிந்தையெலாம் குழைந்துருகு சீர்த்துளசி தாசர்
வீசுபுகழ் இராமகதை இந்திமொழி தன்னில்
விளம்பியிடக் காரணராய் வீற்றிருந்தார் என்றுல்
காசினியில் தமிழ்ப்பெருமை பிறநாட்டார் போற்றக்
கனிந்துழைத்த பெருந்தொண்டர் வேறெவரும் உண்டோ?

8 குருபரனுர் திருமரபில் வழிவந்தோர் பின்னைக்
குளிர்பொன்னி வளநாட்டில் திருப்பனந்தாள் தன்னில்
பெருமைபெறு காசிமடம் நிறுவியருள் பெருக்கப்
பேரறங்கள் எண்ணிலவாய்ப் பெருகஇந்நாள் அருளும்
அருணந்தித் திருமுனிவர் அருட்கொடையால் பொருநை
அலைகொழிக்கும் வைகுந்தத் திருநகரில் எங்கள்
திருமுனிவர் அருட்பெயரால் திகழ்நிலையம் ஐந்து
சீர்வளர்கல் லூரியொடு சிறந்தொளிரக் காண்மின்!

9 சீர்பூத்த செந்தமிழின் திறமனைத்தும் தேற்றித்
தெவிட்டாத அருள்வெள்ளம் சிந்தைகொள ஊற்றிக்
கார்பூத்த ஆணவத்தின் கட்டனைத்தும் நீற்றிக்
கருத்தழிக்கும் வினைமாயைக் கலக்கமெலாம் மாற்றி
ஏர்பூத்த செவ்வேளின் இணையடியைப் போற்றி
எம்பெருமான் திருப்புகழை எழில்திகழச் சாற்றிப்
பேர்பூத்த திருமுனிவர் பெருமையினைப் பாடும்
பெருந்தவத்தைக் கூட்டுவித்த பேரருளும் பெரிதே!

(வெண்பா)

10 வாழி குருபரனுர் சீர்கேட்ட வார்செவிகள்
வாழி அருணந்தி மாமுனிவர் சீரடிகள்
வாழியருள் முத்துக் குமரமுனி தாள்மலர்கள்
வாழி பனசை வளம்.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி

At Tirukkacchur, Pasupati once again wanted to shower His Grace upon Sundarar. The saint and his followers were exhausted and hungry and it appeared it would take a long time to cook. Just then an old Brahmin appeared before St. Sundarar and offered to beg food on his behalf. Sundarar did not say anything and the old man went from door to door collecting food and offered them to St. Sundarar. And without his knowledge the oldman disappeared.

திருக்கச்சூர் ஆலக்கோயில்: பண்: கொல்லிக் கௌவாணம்

முதுவாயோரி கதறமுதுகாட் டெரிகொண்டாடல் முயல்வானே
மதுவார்கொன்றைப் புதுவீசூடும் மலையான்மகள்தன் மணவாளா
கதுவாய்த்தலையில் பலிநீகொள்ளக் கண்டாலடியார் கவலாரே
அதுவேயாமா றிதுவோகச்சூர் ஆலக்கோயில் அம்மானே.

"O, my Lord of Alakkoyil at kacchur! You dance on the cremation ground with fire in one hand surrounded by the howling jackals; you are the husband of the mountain girl who bedecks her hair with fresh flowers. Won't your devotees feel sorry if you go abegging with a broken skull? I did not know this, my Lord?"

(Alakkoyil – name of the temple)

(To be continued)

அன்பும் அருளும்

பேராசிரியர்: திரு. E. S. வரதராஜய்யர் அவர்கள், B. A.,
பூனா.

திருவள்ளுவர் உலகப் பெருமேதைகளில் ஒருவர். 'வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்றார் அமரகவி பாரதியார். 'உலகியல் கூறிப் பொருள் இது வென்ற வள்ளுவன்' என்று புகழ்ந்தார் கல்லாடனார். 'உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார் என்று பொய்யில் புலவரே கூறினர். ஒவ்வொரு மகனும் 'வையத்து வாழ்வாங்கு வாழ வேண்டும்'என்பதே அவர்கருத்து. 'கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்' என்றும், 'கண்ணோட்டத் துள்ளதுலகியல்' என்றும் அப்பெருமான் பகர்ந்துள்ளார். வாழ்வாங்கு வாழ்வதெப்படி என்பதைப் பல அதிகாரங்களில் அநுபவ முறையிற் கூறியுள்ளார் செந்நாப்போதார். அவர் துறவின் பெருமையை நன்குணர்ந்திருந்தும் 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' என்று தேற்றேகாரம் அமைத்துச் செப்பினர். சிறந்த வாழ்க்கைத் துணை அமைய ஒருவன் மேற் கொள்ளக்கடவ பொறுப்புக்கள் பலவாகலின், மனிதன் வாழ் வாங்கு வாழ்வதற்குக் கூட்டுறவும், நேசப் பான்மையும் தேவை. 'யாரொடும் பகை கொள்ளலன் என்றபின், பேரொடுங்கும் புக ழொடுங்காது' என்பது ஓர் சிறந்த அறிவுரை. எனவே பகைமை பாராட்டாது, எவ்வுயிரையும் தன் உயிர் போலப் பாவித்து வாழ்பவனே சிறந்த உலகியல் அறிஞன் ஆவான். இங்கு 'அன்பும் அருளும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும், பயனும் அது' என்ற குறட்பா காணத்தக்கது. அன்பு என்பது தொடர்புடையார் மாட்டு நிகழ்வது. தந்தை, தமர், தாரம் மக்கள் முதலானோரிடம் காட்டப்பெறுவது. அன்புடைமை என்ற அதி காரத்தில் அதன் பெருமைகளைப் பலபடக் காணலாம். அருள்

என்பது அன்பினும் சாலச் சிறந்தது. இது அன்பு பெற்ற குழவி என்று நகைச்சுவை படக் கூறினர். அன்பு என்ற பணிவு தன்னலம் இன்மை என்ற சீரிய பண்புடன் கூடி அருள் என்னும் மகவைப் பெறும் என்று கொள்க.

இந்த அன்புக்கும் அதனுல் ஈனப்பட்ட அருளுக்கும் உள்ள வேற்றுமையை நன்குணர்ந்துதான் முன்னதை இல்லற இயலிலும் பின்னதைத் துறவற இயலின் தொடக்கத்திலும் வைத்தனர் மாதானுபங்கியார். தொடர்புடையார் மாட்டு நாடோறும் காட்டப்பெறும் அன்பு நாளடைவில் விரிந்து மக்கள் அல்லாத பிற உயிர்களிடத்தும் பரிணமித்து அருளாக மாறும். ஆகவே அதனைச் செல்வம் என்ருர். 'அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்' என்றதுகாண்க. இது துறவிகட்கே பெரிதும் வேண்டப் படுவது, தவம் என்ற அதிகாரத்தில் 'உற்ற நோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற்குரு' என்றும் 'கொல்லா விரதம் குவலய மெல்லா மோங்க, எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே" என்றும் கூறப்பட்டமை காண்க.

இனி இந்த அன்பினது மிகவும் சிறந்த ஓர் பண்பு, 'அன்பென்பதொன்றின் தன்மை அமரரும் அறிந்ததன்ருல்' என்ருர் ஓர் புலவர். எவராலும் எளிதில் அறியப்படாத தேவ தேவனும் இந்த அன்பின் வலையில் சிக்கிவிடுவான். 'பக்தி வலையில் படுவோன் காண்க' என்றும், 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே, அன்பெனும் குடில்புகும் அரசே' என்றும் வருவன காண்க. இறைவன் அன்பு வடிவமே என்பர். 'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடை அன்பே' என்ருர். மணிவாசகப்பெருமான். அன்பும் சிவமும் ஒன்றென்பர், திருமூலர். இடையருது முறுகி வளரும் அன்பின் உச்சியிலே இன்பம் விளையும் என்பர். தன் தலையினுல் நடந்து கைலாய மலைக்குச் சென்ற காரைக்கால் அம்மையாரை நல்வரவேற்றுச் சிவபெருமான், அம்மையாரை நோக்கி 'நீர் வேண்டுவது யாது' என்று வினவ, அம்மையார். 'இறவாத இன்ப அன்பு' வேண்டினுர். ஏன் அவற்றை வேண்டினுர்? அதன் குறிப்பு என்ன? இறைவன் திருவுருவம் அவன் இச்சையாய் நிகழ்வது ஒன்று. எழுவகைத்

தாதுக்களால் ஆனது அன்று. அவன் வடிவு இன்பமும் அன்பும் ஒருங்கியுயர்ந்த வடிவு. எனவே இந்த இரண்டினையும் தன் வடிவாக்கண்டுள்ள அவனை அடைந்து தானும் அவற்றின் வடிவாக இருத்தல் வேண்டும் என்பது பொருள். இந்த அன்பு என்ற பண்பு இல்லாதவரை, அறக் கடவுள் என்புமில்லாத புழுக்கள் போன்ற உயிர்களை வெயில் காய்வது போலக் காயும் என்பர். அன்பு இன்றேல் வாழ்க்கை சிறவாது. 'அன்பிலாரெல்லாம் தமக்குரியர் அன்புடையார், என்பும் உரியர் பிறர்க்கு' என்றும் அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண், வற்றல் மரம் தளிர்த்தற்று' என்றும் வந்தமையும் காண்க. தன்னலம் பாராட்டாது தன் முதுகெலும்பை வேண்டி வந்த இந்திரற் களித்த ததீசி முனிவரையும், ஒரு புருவினிடத்திலே உள்ள தயையால், தராசுத் தட்டிலேறித் தன் தசையை அறுத்து உதவிய சிபிச்சக்ரவர்த்தியையும் காண்க.

முடிவாக எவ்வுயிரையும் தன் உயிர் போன்று பாவித்து அவைகட்குத் துன்பம் செய்யாமலும் அவைகட்குத் துன்பம் நிகழ்ந்த போது, ஆவனசெய்தலும், அன்பு பற்றியும் அருள் காரணமாகவும் நிகழ்வன. அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை என்ற முது மொழியும் காண்க. சிவனடியாரிடம் பேரன்பு கொண்டு பல அரிய செயல்களைச் செய்த அடியார்கள் வரலாற்றினைத் திருத்தொண்டர் புராணத்திற் காண்க. அன்பேசிவம்!

உ
திருச்செந்திலாண்டவன் துணை

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–13 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 1–50 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	5 ஷிலிங் அல்லது ரூ. 3–25 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the
Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

21

Markandeya was a staunch devotee of Lord Siva. He was destined to die at the age of sixteen. Yama, the god of Death approached him in time to take away his life. But the great Siva Bhaktha clung to the Siva Linga which he was fervently worshipping and appealed to the Lord for protection. Answering his appeal Lord Siva came to his rescue, kicked Yama to death and blessed Markandeya to live for ever. Remembering this story St. Thayumanavar speaks to the Lord that a devotee has no fear of death.

மார்க்கண்டர்க் காக மறலிபட்ட பாட்டையுன்னிப்
பார்க்கின் அன்பர்க்கென்ன பயங்காண் பராபரமே!

(பொ-ரை) இயமன் மார்க்கண்டேயர் பொருட்டுப் பட்ட பாட்டினை எண்ணிப் பார்த்தால் உன்னடியார்க்கு என்ன பயமுண்டு?

Oh! Lord Supreme! will Your devotees have any fear of death, if they reflect upon the kick received by Yama, the god of Death when he approached Markandeya?

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 4-ன் தொடர்ச்சி)

கும்பாதி காரிய மெனத்தமை நிமித்தமாக்
கொண்டவகி லாண்டங்களின்
குழுவுக்கு மற்றுத்த மிருவர்குறி யுந்தலைக்
கூடினுந் தான்றனக்கச்
சொம்பாதி யன்மைக் கனைத்துந்தன் மயமெனும்
சுருதிகரி யாவைத்துமச்
சுருதிக்கு மெரிசுடர்ப் பருதிக்கு மிரவிகுல
தோன்றற்கு மிளவலுக்கும்
சம்பாதி யொடுநற் சடாயுவுக் கும்பெருந்
தவமுனிவ ரெழுவருக்கும்
தண்ணளி சுரந்திட்ட தீராத வினைதீர்த்த
தம்பிரான் திருமேனியிற்
செம்பாதி யுங்கொண்ட தையனு யகிகுமர
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. (13)

குடம் முதலியவற்றிற்குக் குயவன் முதலியோர் நிமித்த காரணம் ஆனாற் போலத், தம்மை நிமித்த காரணமாய்க் கொண்ட அகிலாண்டத் தொகுதிகளுக்கு ஆணும் பெண்ணு மாகிய இருவரது அடையாளங்களும் தலைக்கூடியிருந்தாலும், சிவசக்திகளாகிய அவ்விருவருக்குள் சத்தியாகிய பெண்ணுக்குச்

(தொடர்ச்சி 292-ஆம் பக்கம் பார்க்க).

"இதுஸ் ஸோஹா" — முஸ்லீம் பண்டிகை *

திரு. K. M. வேங்கடராமையா அவர்கள், M. A. B. O. L.,

திருப்பனந்தாள்.

இதுஸ் ஸோஹா என்பது முஸ்லிம்களுக்குரிய இரு பெரும் பண்டிகைகளுள் ஒன்று. இதுஸ் பிதிர் (Idul Fitr) அல்லது இத் (Id) என்பது இன்னொரு பண்டிகையாகும். இதுஸ் ஸோகா (Iduz-zoha) என்பது பக்ரீத் (Baqrid) என்றும், இத் குர்பான் (Id - Qurban) என்றும் கூறப்படுவதுண்டு. இப் பண்டிகை முஸ்லிம் மாதமாகிய ஜில்ஹாஜ் (Zylhaz) என்ற மாதத்தில் 10-ம் வ கொண்டாடுவர்.

இதுஸ் ஸோஹா (Iduz - Zoha) பண்டிகை கொண்டாடு வதற்கு உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள முஸ்லீம்கள் மெக்காவுக்கு யாத்திரை செல்வர். இப் பண்டிகை இப்ராஹிம் என்ற முஸ்லிம் தலைவரோடு தொடர்புடையது. அவர் தன்மகன் இஸ்மாயில் என்பவரை இறைவனுக்குப் பலியிட்ட செயலுக்கும் இப்பண்டிகைக்கும் தொடர்பு உண்டு.

ஒரு நாள் இறைவன் தனக்குப் பலிதருமாறு இப்ராஹிம் கனவில் தோன்றிக் கூறினர். இப்ராஹிம் 100 ஒட்டகங்களைப் பலியிட்டார்; அங்ஙனமே மறு நாளும் கனவு கண்டார். மீண்டும் 100 ஒட்டகங்கள் பலியிடப் பெற்றன. மூன்றும் நாள் இரவும் அம்மாதிரியே கனு வந்தது. இப்ராஹிம் இறைவனை நோக்கி, 'ஆண்டவனே! நான் எதனைப் பலியிடுவது' என்று கேட்க, இறைவனும், 'நீ எதனை மிகவும் விரும்புகிருயோ அதனைப் பலி தருவாயா' என்ருர். இப்ராஹிம் பின் வாங்கவில்லை; மெக்கா விலிருந்து ஆறு கல் தொலைவிலுள்ள மினு (Mina) என்ற இடத் துக்குக்குத் தன் மகனை அழைத்துச்சென்ருர். பலியிடப் பெறும் இடத்துக்குச் சென்றதும், தந்தைக்குத் தன் மகனிடத்துள்ள பாசத்தினல் தடை ஏற்படுமோ என்று கருதிய அவர் மகனுகிய

---

* லீடர் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் 12—4—65-ல் வெளி வந்த ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி எழுதியது.

இஸ்மாயில், பலியிடும் பொழுது துணியினுல் தம்கண்களை மறைத்துக் கொண்டு பலியிடுமாறு தன் தகப்பனை வேண்டிக் கொண்டார். அங்ஙனமே இப்ராஹிம் கண்களைத் துணியால் மறைத்துக் கொண்டு தன் மகன் கழுத்தில் வாளைச் செலுத்தித் தன் கண்களைத் திறந்து பார்த்தார். என்ன வியப்பு! தன்மகன் ஊறு பாடின்றி இருந்ததையும், அவ்விடத்தில் ஒரு செம்மறி யாடு வெட்டப் பட்டுக் கிடந்ததையும் இப்ராஹிம் கண்டார். இறைவன் இங்ஙனம் இப்ராஹிம்மின் உறுதியைச் சோதித்தார். இப்ராஹிம் இச்சோதனையில் உறுதியுடன் நின்ருர். இறைவன் ஏவலால் ஜிப்ரெயில் (Jibrail) என்ற தேவதூதர் இஸ்மாயில் இடத்தில் ஆட்டை அமைத்தார்.

இதுஸ் ஸோஹறாவுக்கும் ஹஜ்யாத்திரைக்கும் உரிய சடங்குகளெல்லாம் இந்தக் கதைத் தொடர்பாகவே இருக்கும். இஸ்லாம் மதத்தினர் யாவரும் தம்முடைய சேர்மானத் தொகையில் 2½% இந்தப் பலியிடுதற்காகத் தரவேண்டும் என்றும் விதியிருக்கிறதாம். ஜில்ஹாஜ் (Zylhaj) மாசத்தில் 10, 11, 12-ம் தேதிகளில் இந்தப் பலியிடுதல் நடைபெறும். பலியிட்ட மாமிசத்தில் மூன்றில் ஒரு பங்கு ஏழைகளுக்கு அளிக்க வேண்டும்; இன்னொரு பங்கு உறவினர்க்கும் நண்பர்களுக்கும் செலவிடப் பெறும்; தோலின் விலை ஏழைகளுக்காவது அறநிலையங்களுக்காவது அளித்தல் வேண்டும்.

இதுல் பிதிர் (Idul Fitr) என்ற பண்டிகையைப் போல இப்பண்டிகையும் இளைஞர்க்கும் முதியோர்க்கும் இன்பந்தரும் பண்டிகையாகும்.

இப்பண்டிகை நாளில் விடியற் காலையில் நீராடி ஆண்களும் குழந்தைகளும் ஆடையலங்காரம் செய்து கொண்டு இட்கா (Idgah), ஜமாமஸ்ஜித் (Jama Masjid), அல்லது மொஹல்லா மசூதிக்குச் செல்வர். கடவுள் வணக்கத்துக்குப் பிறகு இமாம் (Imam) குட்பா (Khutba) என்ற பிரசங்கம் நிகழ்த்துவர். அப்பிரசங்கத்தில் இப்ராஹிம் செய்த செயற்கரும் செயல்பற்றி விரித்துக் கூறுவர். பிறகு யாவரும் தத்தம் இல்லங்களுக்கு விரைந்து சென்று பலியிட்டுப் பலிமாமிசத்தை

ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பர்; நண்பர்க்கும் உறவினர்க்கும் விருந்தளிப்பர்.

இந்தப் பண்டிகை ஒரு சிறந்த உண்மையைத் தெரிவிப்பது. இறைவனிடம் மக்களுக்கு எவ்வளவு பற்று உள்ளது என்பதை இச்செயல் காட்டும். எல்லாம் இறைவனுடைமை; நாம் மிகவும் விரும்புவனவற்றை இறைவனுக்கு அளிக்க வேண்டும் என்ற சமய பொது உண்மையை இக்கதை தெளிவாகக் காட்டுகிறது. எப்பொழுதும் ஏழைகளை மறக்கக் கூடாது; ஏழைகளுக்கு இட்டு உண்ண வேண்டும் என்பதை இக்கதை அறிவுறுத்துகிறது.

இப்ராஹிம் தன் மகனை இறைவனுக்குப் பலியிட்டது, பெரிய புராணத்தில் கண்ட சிறுத்தொண்டர் வரலாற்றை நினைப்பூட்டுகிறது. சிறுத்தொண்டரின் முறுகிய பக்தியையும் செயலாற்றலையும், இப்ராஹிம் செயலோடு ஒத்திட்டுப் பார்த்து இறைவனிடம் முறுகிய பக்தியுடையவராக மக்கள் திகழ்வாராகுக.

(முன் 289-ஆம் பக்கத்தொடர்ச்சி)

சிவத்தில் பாதி மாத்திரமில்லாமல் முழுதும் உண்டு என்பதை "சர்வம் சக்தி மயம்" என்னும் சுருதியே சாட்சியாக வைத்திருந்தும், அந்த வேதத்திற்கும், ஒளி வீசுகின்ற கதிரவனுக்கும் சூரிய குலத் தோன்றலாகிய இராமனுக்கும் அவன் தம்பி இலக்குமணனுக்கும் சம்பாதிக்கும் சடாயுவுக்கும் பெரிய தவத்தையுடைய ஏழு முனிவர்களுக்கும் குளிர்ந்த அருளைச் சுரந்து தீராத வினைகளைத் தீர்த்த தமக்குத் தாமே தலைவராகிய வைத்தியநாதக் கடவுளரது திருமேனியில் நேர் பாதியையும் கொண்ட தையல் நாயகியின் குமரனே! செங்கீரை ஆடியருளுவாயாக! செத்துப் பிறக்கின்ற தெய்வங்களுக்கு மணவாளனே செங்கீரை ஆடியருளுவாயாக!

(தொடரும்)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — ஐந்தாம் கொத்து

இனி, ஐந்தாம் கொத்து வாக்கைப் பரிபாகப் படுத்தும் சிவ சத்தி அநுபூதி. பன்றிக்குட்டிக்கு இரங்கும் அருள் அடியேற்கு அருள வேண்டுமென்ற திருவருள் விநியோகமாவன :

காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கொர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே.

(இ - ள்). நாதனே! அடியேன் திருவடியைக் காண்பேனோ வெனில், அவை கட் புலப்பட மாயையில் வாழ்வதல்ல; ஆனாலும் அடியேன் பன்றிக்குட்டி யானாலல்லவோ திருவடி காண்பேன். அவை போலப் பரிபாக முடையேனல்லேன். வீணாட் கழிக்குமடியேன்; பூதபரிணாம தேகத்திலே தேவரீர் அருளாற் சீவன் முத்தி தசையே பரமுத்தி யடைவதன்றிக் காயங் கழிந்தால் விதேக முத்தி பெறுமாறறியேன். ஆனதால் அடியார்கட்குப் புலப்படும் சுவாமி! அடியேனை இத்தேகத்திலே தானே திருவடி கொடுத்து இரட்சிக்க வேண்டும்—என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை–திருவான்மியூர். மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும். 20% கழிவு உண்டு.

கோவில் பூசகர் ஆதி சைவர்
உதவி நிதி ரூ. 40,000/-.

"முன்னவனுர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கள்ளங் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே"

என்றும்,

"ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே"

என்றும் திருமூலர் திருமந்திரத்தில் கோயில் பூசைகள் முட்டின்றி நடைபெருவிடில் ஆகும் தீங்குகளைக் குறிப்பிட்டுள்ளார். வாரி வளம் பெருகவும், நம்மரசு வலிமிகுந்த வெற்றியோடு நிலவவும், அவனியில் பசியும் பிணியும் நீங்கி வசியும் வளமும் ஓங்கவும், பின் 3-வது பாராவில் விவரித்த வண்ணம் 'கூற்று தைத்தான் திருக்கோயில்களெல்லாம் சாற்றிய பூசைகள் தப்பாது நடைபெறும் பெருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது "கோயில் பூசகர்–ஆதி சைவர் உதவி நிதி" எனப் பெறும்.

2. இதற்குரிய முதற் பொருள் ரூ. 40,000/- (ருபா நாற்பதினுயிரம்) இது ஆண்டு தோறும் வட்டி தரக்கூடிய கடன் தாள்களில் முதலிடு செய்யப்பெற்றுள்ளது. 1. 4-1/4% தேசிய தற்காப்புப் பத்திரங்கள் (National Defence Bonds) 1972. எம். எஸ். 277. ரூ. 15,000/-. 2. 4-3/4% சென்னை மாநில மின்சாரக் கழகக் கடன் தாள்கள் (4¾% Madras State Electricity Bond 1975 MEEB 4. 235. dated. 23-9-1963) ரூ 5000/- 3. 7-3/4% வட்டி தரக்கூடிய கும்பகோணம் கூட்டுறவு மத்திய பாங்க் நிலையான முதலீடு 7¾% (Co-operative Central Bank Ltd., Kumbakonam Fixed Deposit No. 10332 dated

1-3-1965 Rs. 20,000/-. ஆக ரூ. 40,000/- இது நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப் பெற்றுவரும்.

3. (அ) இம்முதற் பொருளினின்று கிடைக்கும் வட்டித் தொகை வித்தகப் பாடல் முத்திறத்து அடியார் ஆகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய இம்மூவராலும் அல்லது இம்மூவருள் ஓரிருவராலும், திருமெய்ஞானத் திருமுறைப்பாடல் பெற்றுள்ள தலங்களில் எவையேனும் இரண்டு தலங்களில் பூசை செய்யும்படியான முப்போதும் திருமேனி தீண்டுபவர்கள் எனப்பெற்ற ஆதி சைவ அந்தணர்களில் கோவில் ஒன்றுக்கு ஒருவர் வீதம் இரண்டு கோயில்களுக்கும் சேர்ந்து இருவருக்கு உதவித்தொகை அளிக்கப் பயன்படுத்தப்பெறும்.

(ஆ) சென்னை அறநிலைய பாதுகாப்பு ஆணையர் (Hindu Religious and charitable Endowments Commissioner) அவர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பாடல் பெற்ற க்ஷேத்திரங்களில் உள்ள இரு ஆதி சைவ அந்தணர்களுக்கு மாதம் 1-க்கு நபர் ஒன்றுக்கு ரூ. 50/- வீதம் உதவித்தொகை அளிக்கப் பெற்று வரும். இவ்வுதவித் தொகையுடன் அவர்களுக்கு இதுகாறும் கோயிலில் வழங்கப் பெறும் சம்பளம் வகையருவும் கொடுக்கப் பெறலாம்.

(இ) ஷை ஆதி சைவ அந்தணர் இருவரும் மாதந்தோறும் தாம் பணி செய்தமைக்கு அத்தாட்சியாக ஷை கோயில் அதிகாரி அல்லது மானேஜிங் டிரஸ்டியிடம் இருந்து அத்தாட்சிப்பத்திரம் பெற்று நமக்கு அனுப்பிக் கொள்ள வேண்டும். எத்தனை நாட்கள் பணி செய்ததாக அத்தாட்சி வருகிறதோ அத்தனை நாட்களுக்கு மட்டும் உரிய உதவித் தொகை ஷை கோயில்களின் மானேஜிங் டிரஸ்டி அல்லது எக்சிக்யூடிவ் ஆபீசர் அவர்களுக்கு அனுப்பப் பெற்று வரும். ஷை எக்சிக்யூடிவ் ஆபீசர் அல்லது மானேஜிங் டிரஸ்டி ஷை ஆதி சைவ அந்தணர்களுக்குத் தொகை அளித்து இரசீது பெற்று நமக்கு அனுப்பிவர வேண்டும்.

(ஈ) பூசை முட்டின்றி நடத்த வேண்டியது உலக க்ஷேமத்தின் பொருட்டு ஆகையால் ஷை பூசகர்கள் வராத நாட்களில்

பதிலுக்குப் பூசை செய்யும் பூசகர்களுக்கு அவர்கள் எத்தனை நாட்கள் பூசை செய்ததாக அத்தாட்சி வருகிறதோ அத்தனை நாட்களுக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 1-50 விதம் ஆகும் தொகையும் அத்தாட்சி வந்ததும் அனுப்பப்பெற்று வரும்.

(உ) ஆதி சைவ அந்தணர் உதவித்தொகை வட்டி வருமானத்திற்கு ஏற்பக் கூட்டவும் குறைக்கவும் பெறும்.

(ஊ) மேற்கண்டவாறு (Hindu Religious and Charitable Endowments) கமிஷனர் அவர்களால் எந்த ஆண்டிலேனும் சிவாசாரியர்கள் தேர்ந்தெடுக்கப்பெருது அதனுல் உதவித் தொகை அளிக்காது போனுல் ஷ எஞ்சியுள்ள தொகை பின் ஆண்டுகளில் Hindu Religious and charitable Endoments கமிஷனர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பெறும் சிவாச்சாரியர்களுக்கே அளிக்கப்பயன்படுத்தப்பெறும்.

4. ஷ நிதி வருமானம் வேறு எந்த முறையிலேயும் பயன் படுத்தப் பெற மாட்டாது. ஷ செலவு போக எஞ்சியுள்ள வருமானம் இதர பாடல் பெற்ற தலத்துப்பூசை செய்யும் ஆதி சைவருக்கு உதவி அளிக்கவும், இத்தருமத்தை நடத்துவதற்குரிய செலவுகளுக்கும் பயன்படுத்தப்பெறும்.

5. இம்முதற்பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்து வரும். இம்முதற் பொருள் அரசினரால் திருப்பியளிக்கப் பெறின் அவ்வக்காலங்களில் அதிக வட்டி தரக்கூடிய சேம வைப்புகளில் முதலீடு செய்யப் பெற்று வரும்.

Note: This endowment has been approved by the Commissioner, H. R. & C. E., (Adm) Department, Madras in D. Dis. 58177/63 dated 1-8-1964.

Tirupanandal, 3—3—65 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

This endowment has been Registered at Tiruvadamarudhur, Sub Registrar's office, on 3-3-65 as Document No. 13 Volume 52, Book 4 pages 264 to 268.

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

			ரூ.	பை.
1	விநாயகர் திருமுறை (அச்சில்)	...		
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3	50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3	00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம் மட்டும் புதிய பதிப்பு)	...	2	75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,,	...	2	00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1	30
7*	திருவாசகம் ,,	...	0	56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழைய உரையும் (புதிய பதிப்பு)	...	2	90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தெளிவுரை	...	1	50
10	,, ,, மூலம் மட்டும்	...	0	56
11	திருமந்திரம் (புதிய பதிப்பு)	...	2	25
12	பதினொருந்திருமுறை (புதிய பதிப்பு) ,,	...	1	50
13	பெரியபுராணம் (மூலம்மட்டும்)	...	3	00
14	பெரியபுராணம் உரை நடை	...	2	00
15	திருத்தொண்டர் புராண சாரம்	...	0	40
16	அகத்தியர் தேவாரத் திரட்டு (அச்சில்)			
17	திருவிளையாடற் புராணம் மூலம் மட்டும்	...	3	00
18	திருவிளையாடற் புராணம் உரை நடை	...	2	25
19	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1	75
20	கந்த புராணம் - முதல் மூன்று காண்டங்கள் மூலம் மட்டும்	...	2	75
21	,, யுத்த தேவ காண்டம் ,,	...	2	00
22	,, தக்ஷகாண்டம் ,,	...	1	50
23	கந்தபுராண உரைநடை ,,	...	3	00
24	திருக்குறள்-அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1	50
25	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2	50
26	திருக்குறள் - காமத்துப்பால் ,,			
	டி 24. 25. 26. திருக்குறள் 3 புத்தகமும்	...	4	00
27	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0	75
28	தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரை	...	1	25
29	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0	25
30	திருக்கைலாய ஞானவுலா - உரையுடன்	...	0	50
31	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன்	...	0	25
32	கந்தரனுபூதி மூலம்	...	0	13
33	கந்தரனுபூதி தெளிவுரை	...	0	35
34	கந்தர்கலி வெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புகளுடன்	...	0	37
35	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும்	...	0	10
36	கந்தர்கலி வெண்பா மூலமும் உரையும்	...	0	37
37	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும் ஹிந்தியும்	...	0	50
38	சகலகலாவல்லிமாலை ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0	60

Under No. R. No. 1485/57

39	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
40	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
41	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0 13
42	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனுட்சி யம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனுட்சியம்மை குறம்	...	2 75
43	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்		1 25
44	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
45	பண்டார மும்மணிக் கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை	...	1 00
46	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
47	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
48	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும்	...	0 50
49	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
53	டி டி பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
54	டி டி காமத்துப்பால் டி	...	1 20
55	அபிராமி அந்தாதி-தெளிவுரையுடன்	...	0 50
56	மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50
57	திருவாரூர்-திருப்பறுவல்கள்	...	0 10
58	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
59	பழமொழித்திருமுறை	...	0 25
60	திருவாரூர் நான்மணிமாலை	...	0 50
61	Hymns and Proverbs	...	0 30
62	அப்பர்விழா வெளியீடு	...	0 25
63	நவக்கிரகமாண்பு	...	0 25
64	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும்	...	0 30

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.
   "தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோயில்தெரு,
   திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறை பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து ஏஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் -65.